உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஸதாசிவகுரவே நம:

வடமொழி – தென்மொழி

சிவஞானபோதம்

(மூலமும் – உரையும்)

எம்பிரான் மெய்கண்டார்

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி !!

வெளியீடு :

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்

கள்ளக்குறிச்சி-606 202.

திருக்கயிலாயப் பரம்பரை - திருவாவடுதுறை ஆதீனம்
24-ஆவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசார்ய சுவாமிகள்

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீஸதாசிவகுரவே நம:

வடமொழி - தென்மொழி

சிவஞானபோதம்

(மூலமும் - உரையும்)

நூலாசிரியர்
சிவஸ்ரீ தில்லை S.கார்த்திகேயசிவம்,எம்.ஏ.,

இந்நூல் -
சேலம் இராஜகணபதி திருக்கோயில் அர்ச்சகர்
சிவஸ்ரீ K. நாகராஜகுருக்கள் - அமுதா அவர்களின்
கைங்கர்ய உதவிகொண்டு வெளியிடப்படுகிறது.

வெளியீடு :
ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்
கள்ளக்குறிச்சி - 606-202.

நூல் விபரங்கள்

நூல் பெயர்	: சிவஞான போதம் (மூலமும், உரையும்)
நூல் ஆசிரியர்	: சிவஸ்ரீ தில்லை எஸ்.கார்த்திகேயசிவம்,எம்.ஏ.,
நூலின் வகை	: சைவசமய சாத்திர நூல்
©	: சிவஸ்ரீ தில்லை எஸ்.கார்த்திகேயசிவம்,எம்.ஏ.,
முதல் பதிப்பு	: சுபகிருது வருடம், ஐப்பசி-09 ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை (26-10-2022)
நூலின் அளவு	: 1/8 டெம்மி
பக்கங்கள்	: 76
விலை	: ரூ. **100/-**
தாள்	: 16 கி.கி. மேப்லித்தோ
எழுத்து	: 12 புள்ளிகள்
படிகள்	: 500
வெளியீடும், கிடைக்குமிடம்	: தில்லை எஸ். கார்த்திகேயசிவம் ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம் நெ.27, இராமச்சந்திரா நகர், கள்ளக்குறிச்சி-606 202. போன்: 97518-48933
நூல் அமைப்பு	: ஸ்ரீகணநாத நாயனார் நூலகம் திருச்சிராப்பள்ளி-620 008. செல்லிடப்பேசி : 99528-06121. Email : gnanam.tcy@gmail.com

அச்சாக்கம் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ், சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417.

பொருளடக்கம்

அருள் வாழ்த்துரை 4

ஆசியுரை 6

முன்னுரை 10

தோற்றுவாய் 13

நூல் அறிமுகம் 18

சிவஞானபோதம் 20

1. ஸ்ரீ நந்தியம்பெருமான் ஆகம சிவஞானபோதம் உபதேசம் பெற்ற வரலாறு 44

2. ஸ்ரீ மாணிக்கவாசகரும் சிவஞானபோதமும். 47

3. ஸ்ரீமெய்கண்ட தேசிகர் அருள் வரலாறு 49

4. வடமொழி சிவஞானபோதமும் சிவாக்கிரமாபாஷ்யமும் 52

5. சிவஞான போதமாபாடியம் அருளிச்செய்த ஸ்ரீ மாதவ சிவஞானசுவாமிகள் அருள் வரலாறு 56

6. இலக்கணம் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் ஸ்வாமிகளும் சிவஞானபோதமும். 60

7. சிவஞானபோதத்துக்கு வந்த உரைநூல்கள் - பதிப்பு விபரம் 63

8. மெய்கண்ட சிவாசார்யார் துதிகள் 73

அருள் வாழ்த்துரை.

சிறிய ஆடியிற் பெரிய மால்வரைப் பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத்து அவற்றின்
நெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
குறிசெய் தீந்தமிழால் உரை குரவனைப் பணிவாம்.

- *விநாயகபுராணம்*

''வடமொழி-தென்மொழி சிவஞானபோதம் - மூலமும் - உரையும்'' என்னும் நூலினை சிவஸ்ரீ.தில்லை. எஸ்.கார்த்திகேய சிவம் அவர்கள் வெளியிடவுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

ரௌரவ ஆகமத்துச் சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களையும், ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களையும் பொருள் விளக்கத்துடன் தந்துள்ளார். பண்டார சாத்திரங்கள், உலகுடைய நாயனார் கழிநெடில், சிவஞானபோதத்துச் சிறப்புப் பாயிரம், மாபாடியம் போன்றவற்றிலிருந்து தக்க மேற்கோள்கள் காட்டியுள்ளமை பாராட்டத்தக்கது. மாதவச்சிவஞான சுவாமிகள், ஸ்ரீ சிவாக்கிரயோகிகள், இலக்கணம் ஸ்ரீ முத்துக் குமாரத் தம்பிரான் சுவாமிகள் ஆகிய பெருமக்கள் சிவஞான போதத்திற்கு ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

ஆகமச் சிவஞானபோதத்தை வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்காமல் கருத்து விளக்கமாகவே ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் மொழிபெயர்த்துள்ளார் என்று நூலாசிரியர் கூறுதல் உண்மையே ஆகும். மேலும் ஆகமச் சிவஞான போதத்துள் பன்னிரு சூத்திரங்கள் தவிர அவற்றுக்குப் பொருள் விளக்கமாக அதிகரணங்களையும் இயற்றியருளியுள்ளார். இந்த அதிகரணங் களையும் கற்றுத் தேர்ந்தால் மட்டுமே சிவஞான போதத்தின் சூத்திரங்களை உள்ளவாறு பொருள் அறிய முடியும்.

சிவஞானபோத நூலின் வரலாறு, மேன்மை, பொருள் வளம் முதலான சிறப்புக்கள் குறித்து அறிந்து கொள்ள இந்நூல் நன்கு துணை செய்யும்.

சிவஸ்ரீ தில்லை, எஸ்.கார்த்திகேயசிவம் அவர்களின் சிவநெறிச்சீர்பணிகள் மேன்மேலும் தழைக்கவேண்டுமென நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞான மாநடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

Sivamayam
SIVAGAMA KALANITHI, SIVAGAMA CHELVAR,SAIVA SIDHDHANTHA SARABHAM
A.V.SWAMINATHA SIVACHARIYAR
FOUNDER & PRINCIPAL
SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI
No:32, Mayuranathar South Street, Mayiladuthurai, Tamilnadu, India- Pincode: 609001
email:avssivachariyar@yahoo.com website: www.sivapuramtrust.com

உ
சிவமயம்.

ஆசியுரை.

தந்தையும் தாயுமாகி தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர் கூடி முறை முறை இருக்குச்சொல்லி
எந்தை நீ சரணம் என்று அங்கு இமையவர் பரவி ஏத்தச்
சிந்தையுள் சிவமதானார் திருச்செம்பொன் பள்ளியாரே.

- நாவுக்கரசர்

'உலக உயிர்கள் இன்பத்தையே வேண்டுவன, துன்பத்தை விரும்பாதன, இன்பம் துன்பம் இரண்டிற்கும் காரணமாய் இருப்பது புண்ணியம் பாவம் எனும் இருவினைகளாம். இவ்விருவினைத் தொழிற்பட்டு நிற்கும் உயிர்கள் பிறந்தும் இறந்தும் நிற்குமேயொழிய நிலையான பேரின்பத்தை அறிய முடியாதன. காரணம், உயிரோடு இணைந்திருக்கும் ஸஹஜமலம் எனும் ஆணவமேயாம். இது கன்மம் எனும் இருவினைகளைச் செய்யத் தூண்டும். அதன் பலனாகிய அனுபவத்தை நுகர மாயாப்ரபஞ்சத்தையே அண்டி நிற்கும். எனவேதான் சைவ சித்தாந்தம் ஆணவம் கன்மம் மாயை என முப்பொருளை முதன்மைப்படுத்துகிறது.

இனி; பதியாகிய சிவபரம்பொருளின் திருவடிப்பேறே பேரின்பம். பசுக்களாகிய ஆன்மாக்கள் பதியிடத்தில் சேர வொட்டாவாக மும்மலங்கள் பாசம் என்பதாக உயிரை கட்டியுள்ளன. இதனை,

'' செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம்மலம் கழுவி'' என மெய்கண்ட பரமாசாரிய சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

சைவசித்தாந்தம் உயிர்கள் மலநீக்கம் பெற்று சிவனோடு சுத்தாத்வைத பரமுத்தியைப் பெறும் வழிகளைக் கூறுவன என்பதை முதற்கண் உணர்தல் நலம். சித்தாந்தம் என்பது சிவாகமங்கள். அரும்பு மொட்டு காய் பழம் என்ற படிநிலையில் உலக இன்பங்களை நுகர்ந்து முதிர்ச்சிபெற்று பேரின்பமடையும் வழியைக் கூறும் முகத்தான் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நாற்பாதங்களைக் கூறுகின்றன.

விஞ்ஞானகலர், ப்ரளயாகலர், ஸகலர் என ஆன்மாக்கள் மூவகைத்தாம். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு விஞ்ஞான களர் என்று பெயர். இவற்றிற்கு சிவபெருமான் தாமே நேரிடையாக மலநீக்கம் செய்து பேரின்பம் அருளுவார். இதனை மணிவாசகர், புல் பூண்டு முதல் தேவர் வரையிலான பிறவிகளில் உழன்ற நமக்கு சிவபரம்பொருள் திருவடி காட்டி ஆட்கொண்டதாக அருளுவார்.

''மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'' எனக்குறிப்பிடுகிறார். மற்றைய ஆன்மாக்கள் பக்குவம் பெறும் காலத்தில் சிவபெருமான் மானுட உடல் தாங்கிநிற்கும் குருவை அதிட்டித்து அவர்வழி அவ்வான்மக்களுக்கு சக்திநிபாதமும் மலபரிபாகமும் செய்வித்து பேரின்பம் அருளுவார் என்பது ஆகமாந்தம்.

இனி; தாமிரத்தை களிம்பு பிரியாதது போன்று ஆன்மாவை ஆணவமலம் பிரியாது. தாமிரத்தைத் துலக்கிவைக்கும்போது மின்னும், புறக்காற்றுப்பட்டதும் கறுத்து விடும். தவம் பூஜை செய்யும் காலத்து மலம் நீங்கி ஒளிரும் ஆன்மா புறவிஷயத்தாக்கம் பட்டதும் மீண்டும் மறைப்பு நிலை அடையும். நிலையாக மின்னும் தன்மையை தாமிரம் பெறுதற்கு அதனை உருக்கி அதிகமான பொன்னை சேர்த்தல் வேண்டும். அப்போது தாமிரம் என்ற சொல்லிழந்து தங்கமாகி மின்னுகிறது. இதுபோல, ஆன்மாவை தீட்சை என்பதனால் உருக்கி சிவஞானம் என்பதை பதிவு செய்தால் ஆன்மா என்ற சொல்லிழந்து சிவம் என்று மாறி சுத்தாத்வைத பரமுத்தியில் சிவமாக ஒளிரும். அப்போது பாவம் புண்ணியம், இன்பம் துன்பம், பிறப்பு இறப்பு எனும் துன்பநிலைகள் அணுகா. எனவே தாமிரத்திற்கு தங்கம் போல, ஆன்மாவிற்கு சிவஞானம் அவசியமாம் என ஓர்க.

சிவாகமங்களாகிய சைவசித்தாந்தம் விரித்துக்கூறும் இச் செய்தி சாதாரண உயிர்களுக்குப் பொது. இவற்றை நல்வழிப்படுத்த

குருநாதர்களைத் தோற்றுவித்து அவர்கள் சிவஞானத்தை எளிதில் பெற்று அதனை பிறருக்கும் போதிக்கவேண்டிய சிவபரம்பொருள் அருளிச்செய்ததே சிவஞானபோதம் என்பது உண்மை. ரௌரவாக மத்தில் பாசவிமோசன படலத்தில் பனிரெண்டு சுலோகங்களில் சிவஞானபோதம் அருளிச்செய்யப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீகண்ட பரசிவம் நந்தியெம்பெருமானுக்கு உபதேசித்தருள, அவரிடம் சணற்குமாரரும், இவரிடத்தில் சத்தியஞானதரிசிகளும், இவரி டத்தில் பரஞ்சோதிமுனிகளும் உபதேசம் பெற்றனர். நந்தியெம் பெருமான் முதலாய இந்நால்வரும் கயிலையில் உபதேசம் பெற்றவர்கள் ஆதலின் அகச்சந்தானக்குரவர்கள் எனப்போற்றப்படு கிறார்கள்.

இக்குரு பரம்பரையை பூவுலகில் தொடரச்செய்து, அவ்வழி பூவுலக ஆன்மாக்களைப்பக்குவப்படுத்தி பேரின்பமடையச் செய்யக். கருணை கொண்ட பரஞ்சோதிகள் ககனமார்க்கமாய் பூவுலகு வந்து உபதேசிக்கத்தகுந்த பக்குவ ஆன்மாவைத் தேடுங்கால், திருவெண்ணெய் நல்லூரில் சுவேதவனப்பெருமாள் எனும் திருநாமம் கொண்டு விளையாடிக் கொண்டிருந்த ஞானக் குழந்தையின் (இவரது வரலாறு இந்நூலில் விரிவாக உள்ளது) பக்குவம் கண்டு அவருக்கு பரமனார் அருளிய சிவஞானபோதத்தை உபதேசித்தும், தமது ஆசாரியரின் சத்தியஞானதர்சி எனும் திருநாமத்தை தமிழில் மெய்கண்டார் எனக்கொண்டு, சுவேதனப் பெருமாளுக்கு மெய்கண்டார் எனும் தீட்சாநாமமும் சாத்தியருள புறச்சந்தானகுருபரம்பரை பூவுலகில் தோற்றுவிக்கப்பட்டது.

சிவத்தை அறிவில்கொள்ள வழிகூறுவதால் சிவஞான போதம் எனும் திருநாமம் கொண்ட இவ்வுபதேசத்தை தமிழில் ஆக்கி சீடர்களுக்கு உபதேசிக்க ஆசாரியர் அருளியவாறு ஸ்ரீமெய்கண்ட தேவ பரமாசாரியார் பனிரண்டு சூத்திரங்களில் பனிரண்டு சிவஞானபோத சுலோகங்களை தமிழில் அருளி சிற்றுரையாக வார்த்தீகமும் அருளி அருணந்திசிவம் முதலா னோர்க்கு உபதேசித்தருளினார் என்பதை இந்நூல் பூவுலகிற்கு வந்த அருள்வரலாறாகச் சிந்தித்தோம்.

இனி; பிற்காலத்தில் சிலர் இவ்வுண்மை வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் கூறப்புகவே இந்நூலைப்பற்றி மொழி அடிப்படையில் குழப்பம் நீடித்து வருகிறது என்பது உண்மை, இதனை நீக்கும் முகத்தான் வடமொழி தமிழ் இருமொழிகளிலும்

வல்லவராகிய தில்லை எஸ். கார்த்திகேயசிவம் அவர்கள் ''வடமொழி தென்மொழி சிவஞானபோதம் ஓர் அறிமுகம்'' என்ற பெயரில் முழுமையான தெளிவு நூலாக இதனை ஆக்கியிருப்பது காலம்கருதி சிவபெருமானாரின் அருள்வெளிப்பாடே என்பதில் சிறிதும் ஐயமில்லை!!

சிவாக்ரயோகிகள் வடமொழியிலும், பாண்டிப்பெருமாள் முதலானோர் செந்தமிழிலும் உரையெழுதி பிரசித்தமான சிவஞானபோதத்திற்கு எந்தெந்த காலத்தில் யார் யார் எப்படி உரையெழுதியிருக்கிறார்கள் என்ற பட்டியலை எவ்விதக்காய்தல் உவத்தலுமின்றி இந்நூலில் பதிவு செய்திருப்பது ஆனந்தத்தைத் தருகிறது. முன்னுரையில் ஆகமாந்தமானசெய்திகளும், இருமொழி சிவஞானபோத சூத்திரங்கள் சொற்பொருளுடன் ஒப்பிட்டுக்காட்டி யிருப்பதும், இந்நூல் சம்பந்தப்பட்ட ஆசாரியர்களைப்பற்றிய வரலாற்றுக்குறிப்புக்களும் படித்து உணரவேண்டியவைகளாம். ஸ்ரீமத் மாதவ சிவஞானமுனிவர், ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் போன்றோர்களின் பெயர்களே அறிந்திருந்த மட்டில் அவர்களைப்பற்றிய முழுவிபரங்களை இந்நூலாசிரியர் தக்கப்பிரமாணங்களுடன் தந்திருப்பது இத் தலைமுறையினருக்கு பேருதவியாக இருக்கிறது.

தமது சீடர்குல மாணிக்கமாகிய தில்லை. எஸ். கார்த்திகேய சிவம் அவர்கள் பலநூல்களை பலகாலம் ஆய்ந்து மிகுந்த பிரயாசையுடன் இந்நூலை ஆக்கியிருப்பது சைவத்தமிழுலகம் செய்த தவப்பயன் என்றால் மிகையில்லை.

எல்லாம்வல்ல உமையொருபாகனின் திருவருளாலும் குருவருளாலும் இந்நூல் சிறப்புற வெளிவந்து எல்லோருக்கும் கிட்டிடவும், மெய்யன்பர்கள் இந்நூலைப் படித்து சிவஞானபோத நூல் பற்றிய மொழிக் குழப்பங்கள் நீங்கி சிவஞானம் பெற்றிடவும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

எல்லாம் சிவன் செயல்.



ஸ்ரீ ஸதாசிவ குரவே நம: ஸ்ரீ அநந்த குரவே நம:
ஸ்ரீ கண்ட குரவே நம: ஸ்ரீ நந்திகேஸ்வரகுரவே நம:
ஸ்ரீ மெய்கண்டதேசிக குரவே நம:

முன்னுரை

''கல்லால் நிழல் மலைவு, இல்லார் அருளிய,
பொல்லார் இணை மலர், நல்லார் புனைவரே''

''நிர்க்குணனாய் நிர்மலனாய் நித்தியானந்தனாய்
தற்பரமாய் நின்ற தனி முதல்வன்''

எல்லாம்வல்ல ஸ்ரீ தில்லை கூத்தப்பெருமான் திருவருளும் குருவருளும் துணைகொண்டு வடமொழி தென்மொழி சிவஞான போதம் மூலமும் - உரையும் என்ற இந்நூல் வெளியிடப்படு கின்றது.

மெய்கண்ட சித்தாந்த சாஸ்திர நூல்களில் முதன்மையாக விளங்குவது ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞான போதமாகும். பன்னிரண்டு சூத்திரங்கள் அடங்கிய சிவஞான போதமானது மற்ற சைவ சித்தாந்த சாஸ்திர நூல்கள் அனைத்திற்கும் மணிமகுடமாக திகழ்வதாகும்.

சுருங்கக் கூறி விளங்க வைப்பது என்றபடிக்கு சுருங்கக் கூறி மிகப்பெரிய சிவஞானத்தைத் தந்திடும் நூல் இந்த சிவஞான போதமாகும்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு தமிழில் சிவஞானபோதத்தை அருளிச் செய்தார்கள். ஆயினும் இந்நூல் அநாதியே சிவப்பரம்பொருள் திருக்கரத்தில் வீற்றிருக் கின்றது. ஸ்ரீ மணிவாசகப்பெருமானை ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமான் மானிடச் சட்டை தாங்கி குருவடிவமாக கயிலையினின்று எழுந்தருளி திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின்கீழ் வீற்றிருந்தபொழுது, அவரது திருக்கரத்தில் வைத்துக்கொண்டிருந்தது சிவஞானபோதமே ஆகும். இதிலிருந்து சிவஞானபோதத்தின் தொன்மையை உணரலாம்.

அவ்வகையில் சிவப்பரம்பொருள் ஸதாசிவமூர்த்தியாக திருவடிவம் கொண்டு அருளிய சிவாகமங்கள் இருபத்தெட்டில் ஒன்றான ரௌவர ஆகமத்தில் உள்ள சிவஞானபோதமானது

ஸ்ரீ கண்டசிவத்தால் ஸ்ரீ நந்தியம்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டு வழிவழி உபதேச மரபில் பூவுலகம் அடைந்தது.

இந்த இருமொழி சிவஞானபோதங்களும் சைவவுலகம் அறியும் பொருட்டும் ஓர் அறிமுக அளவில் தெரிந்துகொள்ளவும் மேலும் இருமொழி சிவஞானபோதங்களை கற்கவும் தூண்டு கோலாக விளங்கவேண்டும் என்ற நோக்கில் இந்நூல் வெளிவரு கின்றது.

மேலும் இந்நூலில் வடமொழி சிவாக்கிரம பாஷ்யம் பற்றிய செய்திகள், ஸ்ரீ நந்தியம்பெருமான் உபதேசம் பெற்ற வரலாறு, ஸ்ரீ மெய்கண்டார், ஸ்ரீ மாதவ சிவஞான ஸ்வாமிகள் அருள்வரலாறு, இலக்கணம் முத்துகுமாரத் தம்பிரான் பாடியம் பதிப்பித்த செய்திகள், மற்றும் சிவஞானபோதம் சார்ந்து கடந்த சுமார் 100 ஆண்டுகளில் வந்த பதிப்புகள் வெளியீடுகள் பற்றிய சில குறிப்புகள் என தரப்பட்டுள்ளன.

இருமொழி சிவஞானபோதங்களையும் அது தொடர்பான வரலாறுகளையும் கற்கவேண்டும் என ஆர்வங்கொள்வோருக்கு இந்நூல் பயன்படும்.

இந்நூலிற்கு அருள்வாழ்த்துரை வழங்கியும், வெளியிட் டருளியும் சிறப்பித்த திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 24-ஆவது குரு மஹாசந்நிதானம் அவர்களுக்கும் வணக்கங்கள் - நன்றிகள்.

ஆசியுரை நல்கிய மயிலாடுதுறை சிவபுரம் வேதசிவாகம பாடசாலையின் நிறுவனரும் முதல்வருமான சிவஸ்ரீ A.V. சுவாமிநாதசிவாசாரியார் அவர்களுக்கும் வணக்கங்கள் - நன்றிகள்.

இந்நூல் ஆக்கத்தில் துணைநின்ற திருச்சிராப்பள்ளி - மலைக்கோட்டை - சிவஸ்ரீ கல்யாணசுந்தர சிவாசாரியார் அவர்களுக்கு நன்றிகள்.

இந்நூல் வெளியிட கைங்கர்ய உதவி செய்த சேலம் இராஜகணபதி திருக்கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ K.நாகராஜ குருக்கள் - அமுதா அவர்களுக்கு நன்றிகள்

இந்நூலினை அழகுற வடிவமைத்து தந்திட்ட திருச்சி, சிவத்திரு மு. ஜெயக்குமார் அவர்களுக்கும் நமது உளம் நிறைந்த நன்றிகள்.

அன்பர்கள் இந்நூலில் உள்ள குறைகளைப் பொறுத்து ''பாலுண் குறுகி'' என்றபடி அன்னப்பறவைபோல் குணங்களைக் கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சைவசமயத்தவர்கள் இந்நூலினை படித்து இகபர சுகங்களை பெற்றுய்ய வேண்டுமாய் அடியேனது ஆன்மநாயகன் ஸ்ரீ திரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சோமநாதப்பெருமானை பிரார்த்தனை செய்து வணங்குகிறேன்.

சிவார்ப்பணம்.

அன்பன்.

சுபகிருது வருஷம். தில்லை எஸ். கார்த்திகேயசிவம்.

ஐப்பசி-9 (2022) சன்னதித் தெரு,

பொரசக்குறிச்சி.

உ

திருச்சிற்றம்பலம்.

நமசிவாய வாழ்க.

தோற்றுவாய்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடக் கூடிய சமயம் சைவசமயமாகும். ''சைவம் சிவனோடு சம்புந்தமாவது'' என்பது திருமூலர் திருவாக்கு. இத்தகைய உயர்தனிச் சமயமாக விளங்கக்கூடிய சைவசமயத்திற்கு வேதம் ஆகமங்கள் முதல் நூல்களாக விளங்குகின்றன.

''வேதமொடு ஆகமம் மெய்யாம்'' - என்று திருமூலரும், ''அருமறை ஆகமம் முதல்நூல்'' - என்று ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாரும் பாடியருள்கின்றனர். முதல்நூலாகிய வேதம் ஆகமங்களில் வேதம் பொதுநூல் என்றும் ஆகமம் சிறப்பு நூலாகவும் போற்றப்படுகின்றது. இதனை, சிவஞானசித்தியாரில் ஸ்ரீ அருணந்திசிவாசாரியர்,

''வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்,
வேறு உரைக்கும் நூல், இவற்றின் விரிந்த நூல்கள்,
ஆதிநூல் அநாதி அமலன் தரும் நூல் இரண்டும்
ஆரணம் நூல்பொது, சைவம் அருஞ் சிறப்பு நூலாம்.

என்று பாடியருள்கின்றார். பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு உபதேசிக்க சிவபெருமானால் அருளப்பட்ட நூல் சிவாகமமாகும்.

சிவாகமங்கள் மொத்தம் 28 ஆகும். ஒவ்வொரு சிவாகமமும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்குபாதங்ககளை உடையன.

சிவாகமங்களின் சரியா பாதத்தில் அனுஷ்டானம், சரியா தொண்டுகள் பற்றியும்,

கிரியாபாதத்தில், சிவாகம பூஜைகள்,பிரதிஷ்டை, உத்ஸவம் பற்றியும்,

யோகபாதத்தில் - சிவயோக நிலை பற்றியும்,

ஞானபாதத்தில் - பதி பசு பாசம் போன்ற ஞான தத்துவங் களும் கூறப்பட்டுள்ளன.

வேதத்தின் அந்தம் வேதாந்தம் என அழைக்கப்படுவது போல், ஆகமத்தின் அந்தம் ஆகமாந்தம் என்றும் அதுவே சித்தாந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. அதாவது சிவாகமங்களின் ஞானபாதமே சைவசித்தாந்தமாகும். இதனை சிவஞான சித்தியார்- ''சிவாகமங்கள் சித்தாந்தமாகும்'' என உரைக்கும். சிவாகமங்கள் சிவபேதம் ருத்ரபேதம் என இருநிலையில் பகுக்கப்பட்டுள்ளது.

காமிகம் முதல் சுப்பிரபேதம் வரை உள்ள முதல் பத்து ஆகமங்கள் சிவபேதம் என்றும், விஜயம் முதல் வாதுளம் ஈறாக உள்ள பதினெட்டு சிவாகமங்கள் ருத்ரபேதம் என்றும் அழைக்கப்படும்.

இவற்றில் 16வது ஆகமமாக பரமனின் தத்புருஷ முகத்தில் தோன்றிய ஸ்ரீமத் ரௌரவ ஆகமத்தின் ஞானபாதப் பகுதியில் பாசவிமோசனப் படலத்தில் சிவஞானபோதம் பன்னிரெண்டு சூத்திரங்களும் சிவப்பரம்பொருளால் அருளப்பட்டுள்ளன. இந்த சிவஞானபோதத்தை,

''எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்,
நந்தி உரைத்தருளும் ஞானநூல் - சிந்தை செய்து,
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர,
ஏது திருட்டாந்தத்தால் இன்று''.

என்றபடிக்கு, ஸ்ரீ நந்தியம்பெருமான் ஸ்ரீ சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, ஸ்ரீ சனற்குமாரமுனிவர்,

ஸ்ரீ சத்தியஞானதரிசனிக்கு உபதேசிக்க, ஸ்ரீ சத்தியஞான தரிசனிகள் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசிக்க, ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் ஸ்ரீ மெய்கண்டதேசிகருக்கு தந்து உபதேசித்தார். இதனை,

''ஈண்டுள்ளார் உணர்ந்து உய்தற்பொருட்டுத் தமிழிலே மொழிபெயர்த்துப் பொழிப்புரையும் செய்க'' - என்று அருளிச் செய்தார்.

இதனை ஆன்மாக்களாகிய நாம் உய்யும் பொருட்டு திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் சிவஞான நிலையில் உணர்ந்து, தமிழில் சிவஞானபோதமாக அருளிச்செய்தார்.

மெய்கண்டார் தமிழில் பாடினார் என்றால் நேரடி மொழிபெயர்ப்பு (exact translation) என்பதாக அல்ல. அவர் செய்தது free translation அதாவது ரௌரவ ஆகம சிவஞான போதத்தை தம் சிவஞான பக்குவத்தால் உணர்ந்து தமிழில் மொழிபெயர்த்து இயற்றியருளினார்.

சிவஞானபோதம் சித்தாந்த சாஸ்திர நூல்கள் பதினான்கினுள் முதல் நூலாக திகழ்கின்றது.

சிவஞானபோதம் திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார் தவிர ஏனைய பதினொன்று சைவசித்தாந்த சாஸ்திர நூல்களுக்கும் தாயாக விளங்கும் ஞானநூலாகும். சிவஞானபோதம் பிறவிப்பிணியை போக்கும் மருந்தாக உள்ளது. சிவஞானபோதம் சைவசமயத்தவற்கு கிடைத்தற்கரிய பெரிய சிந்தாமணியாக திகழ்கின்றது. சிவஞான போதம் என்பதற்கு பல பொருள்கள் கூறப்படுகின்றன.

1) சிவஞானபோதம் என்பதில், சிவம் - என்பது நித்த முத்த சுத்த சித்தாகிய ஒரு பொருள். ஞானம் - என்பது அப்பொருளைச் சந்தேக விபரீதமின்றி அருள்வழி நின்று உள்ளவாறு அறிதல். போதம் - என்பது ஆகம அளவையால் அறிந்து அப்பொருளை அனுபூதி நிலையில் வைத்து உணர்வது. என்பதாம்.

2) சிவபெருமான் பற்றிய ஞானத்தை ஆன்மாக்களுக்கு போதிக்கும் (உணர்த்தும்) நூல் சிவஞானபோதம் என்று பெயர்.

3) சிவஞானபோதம் என்பதில், சிவஞானம் என்பது ஆகமங் களையும், போதம் என்பது போதித்தலையும் அதாவது சிவாக மங்கள் கூறும் நிச்சயப்பொருள் இதுவே என ஆன்மாக்களுக்கு உறுதிபட உணர்த்தல்.

அதாவது, சிவாகமங்களின் ஞானபாதப் பொருளை நிச்சயித்து தெளிவாக உணர்த்துவதால் சிவஞானபோதம் என்று பெயர்.

4) சிவஞானபோதம் என்பது சிவத்தை அறிதற்குக் கருவியாக உள்ள சுத்தாத்துவித சித்தாந்த ஞானநூலாகும்.

5) சிவஞானம் என்பது ஆகமத்தால் நிகழும் ஞானத்தை உணர்த்துவது ஆகும். சிவாகமங்களின் பொருள் ஒற்றுமையை நிறுவி உணர்த்தும் காரணத்தால் சிவஞானபோதமாகும்.

6) சிவஞானபோதம் என்பது சிவாகமத்துள் ஞானபாதப் பொருளை போதிக்கும் நூல் எனப் பொருள்படும்.

சிவஞானபோதத்தை பற்றி யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர் அவர்கள் கூறுகையில், ''இத்துணை விசேடநூலாகிய இச்சிவஞானபோதத்தை நாடோறும் அன்புடன் அருச்சித்துப் பாராயணஞ் செய்வோர் சகல பாவங்களினின்றும் விடப்பட்டு நித்தியானந்தப் பெருவாழ்வாகிய முத்தியைப் பெறுவார்கள். முத்திக்கு உபாயம் இதற்கு மேலாகச் சொல்லற்பாலன வேறொரு நூலிலும் இல்லை. இது சத்தியம். சத்தியம், முக்காலுஞ் சத்தியம்'' என மூன்றுமுறை சத்தியம் கூறி உரைப்பதில் இருந்து இந்த சிவஞானபோத மகத்துவத்தை நாம் உணரலாம்.

ஸ்ரீ மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம், ரௌரவ ஆகமத்தின் சாரம் என்பது சைவசமய ஆன்றோர் வாக்காகும், திருவாவடுதுறை ஆதீனத்தில் குலதெய்வமாக போற்றப்படுபவர் ஸ்ரீ மாதவசிவஞானசுவாமிகள். இவர்கள் வாக்கே மடத்தின், மடத்தின் சிஷ்யர்களுக்கு பிரமாண வாக்கு. இவர் வாக்கை சைவர்கள் மீறுவதில்லை.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய சிவஞான போதத்திற்கு மாபாஷ்யம் எழுதிய திருவாவடுதுறை ஆதீனத்தின் குலதெய்வமாக போற்றக்கூடிய, ஸ்ரீ மாதவ சிவஞானசுவாமிகள், தமது மாபாடியத்தில், மங்கல வாழ்த்தில், ரௌரவ ஆகமத்தில் எழுந்த சிவாஞானபோத நூலினை தமிழ்உலகம் உய்தற்பொருட்டு மெய்கண்ட தேசிகர் பாடி அருளினார் என உரைக்கின்றார்.

மெய்கண்டார் சந்தான மரபில் திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி களுக்கு அடுத்த பட்டத்திற்கு வந்த (சம காலத்தவர்) ஸ்ரீ அம்பலவாண தேசிகர் செய்த தசகாரியம் நூலில்,

''முன்னவன் வடநூல் நோக்கி மொழிந்தனன் போதம் மற்றோன்,
பின்னவன் அந்நூல் நோக்கிப் பெயர்த்தனன் சித்தியாக,
அன்னவை இரண்டும் நோக்கி அறைந்தனன் புடைநூல் மற்றோன்,
சொன்னவை மூன்றும் நோக்கித் தொகுத்தனன் அவத்தை பத்தாய்''

என்ற பாடலில் வடமொழி ஆகம சிவஞான போதத்தை குருவருளால், எம் குருநாதன் மெய்கண்டதேசிகன் செந்தமிழில் பாடினார் என்று கூறுகின்றார். இவரிடம் உபதேசம் பெற்ற, உலகுடைய நாயனாரும்,

''முந்துமா கமத்தை யருட்டுறை யண்ணல்
மொழிபெயர்த் துரைத்த நூன் முதலா......''

என்று பாடுகின்றார்,

திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ கச்சியப்ப மாமுனிவர் தாம் பாடிய பேரூர்ப் புராணத்தில் குருமரபு வாழ்த்து பாடலில்,

''அங்கணர் தம் கயிலைவரை நந்தி நவின்று அருளும்,
அருள்நூலை மொழிபெயர்த்த ஆசிரியன் மரபில்,
தங்கு துறைசையின் நமச்சிவாயர் மறைஞானர்
தயங்கிய அம்பலவாணர் உருத்திரகோடியர்... ''

என நந்தியம்பெருமான் அருளிய ஆகம சிவஞான போதத்தையே மெய்கண்டார் பாடியருளியதாக கூறுகின்றார்.

எனவே அம்பலவாண தேசிகரின் 14-ஆம் நூற்றாண்டிலும் சரி, மாதவ சிவஞானசுவாமிகளின் 17-ஆம் நூற்றாண்டிலும், ஸ்ரீ கச்சியப்பமாமுனிவர் காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி ரௌரவ ஆகமத்தின் சாரமே மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்று நம் சமயப் பெரியவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது.

இதன்படி ஸ்ரீ மெய்கண்டதேசிகர் தமக்கு உபதேசமாகக் கிடைத்திட்ட சிவஞானபோத ஞானத்தை, திருவெண்ணெய் நல்லூர் ஸ்ரீ பொல்லாப் பிள்ளையாரின் திருமுன்னர் வீற்றிருந்து நிஷ்டையில் கூடி தெளிந்த சிவஞானத்தை தமிழ்மொழியில் சிவஞானபோதமாக பாடியருளினார் என புரிந்துகொள்ள வேண்டும்.

நூல் அறிமுகம்.

மெய்கண்ட சாத்திரங்கள் எனும் பதினான்கு நூல்களில், முதன்மையான நூலாக சைவசமயத்தின் மணிமுடியாக திகழ்வது சிவஞானபோதமாகும். இதன் பெருமையை ஒரு ஞானி,

''வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதுந் தமிழ் அதனின் உள்ளுறுநெய் - போதமிகு,
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்,
செய்த தமிழ் நூலின் திறம்''

என்று போற்றுகின்றார்.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இலக்கணங்களை உணர்த்துவது இந்நூலாகும்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதத்தில், மங்கலவாழ்த்து, அவையடக்கம் என ஆரம்பித்து பன்னிரெண்டு ஞானசூத்திரங்களை அருளிச்செய்துள்ளார்.

உலகத்தின் புறஇருளைப் போக்கும் சூரியன் தோன்றவில்லை என்றால், கண் எந்தப் பொருளையும் காண இயலாது. அதுபோல் ஆன்மாக்களின் அகஇருளைப் போக்கும் சிவஞானபோதம் தோன்ற வில்லை என்றால், ஆன்மா உண்மைச் சமயம் இதுஎன்பதை அறியமாட்டாது.

புறஇருளைப் போக்கும் சூரியன் பன்னிருவர் உள்ளதுபோல், அகஇருளைப் போக்கும் ஞானசூரியனாக சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்களைக் கொண்டு விளங்குகின்றது.

இதில் முதல்ஆறு சூத்திரம் பொது அதிகாரம் என்றும், அடுத்த ஆறுசூத்திரம் உண்மை அதிகாரம் என்றும் அழைக்கப்படும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் பொது இயல்புகள் பிரமாணத்தினாலும், இலக்கணத்தினாலும் அறியப்படும். எனவே இவ்விரண்டும் பொது அதிகாரத்தில் இடம்பெறும்.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் சிறப்பு இயல்புகள் சாதனத்தினாலும், பயனினாலும் உணரப்படும். எனவே

இவ்விரண்டும் உண்மை அதிகாரத்தில் இடம்பெறும். பொது அதிகாரம் ஆராய்ச்சி அறிவால் அறியப்படுவது, உண்மை அதிகாரம் அனுபவ அறிவால் உணரப்படுவது ஆகும்.

பொது அதிகாரத்தில் பிரமாண இயல், இலக்கண இயல் என இரு இயல்களும், உண்மை அதிகாரத்தில் சாதன இயல், பயன் இயல் என இரு இயல்களும் உள்ளன.

பொது அதிகாரத்தில் பதி,பசு பாசம் ஆகிய முப்பொருள் களின் இயல்பை அனுமானப் பிரமாணத்தால் முதல் ஆறு சூத்திரங்களிலும், உண்மை அதிகாரத்தில், அந்த முப்பொருள்களின் சிறப்பு இயல்புகளை சிவபெருமான் திருவருளால் அனுபவப் படுவதை பின் ஆறு சூத்திரங்களிலும் உணர்த்தி பாடப் பட்டுள்ளது.

சிவாகமங்களின் சாரமாகத் திகழ்வது சிவஞானபோதமாகிய இந்நூல். சிவஞானம் என்பது சிவாகமத்தையும், போதம் என்பது உணர்த்தலையும் சுட்டும். எனவே இந்நூல் ''ஆகமசாரம்'' என்று போற்றத்தக்கது. ஒவ்வொரு ஆகமமும் கூறும் முடிவான பொருள் இதுதான் என பொருள் ஒருமைப்பாட்டை, நிறுவி உணர்த்துவதாக, உறுதி செய்வதாக இந்நூல் விளங்குகின்றது.

சிவதீக்ஷை பெற்று சிவஞானபோதம் கற்கவேண்டும் என்பது மெய்ஞானிகளின் வாக்காகும்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதத்திற்கு, மாதவ சிவஞான ஸ்வாமிகள் சிற்றுரை, பேருரை என இரு உரைநூல்கள் இயற்றியருளியுள்ளார். இவற்றில் பேருரைக்கு திராவிட மாபாடியம் என்னும் சிவஞானபோத மாபாடியம் என்று பெயர் ஆகும். இனி வடமொழி -தென்மொழி சிவஞானபோத சூத்திரங்களை திருவருள் குருவருள் துணையோடு காண்போம்.

(அ) பிரமாண இயல்

1. ஸ்ரீமத் ரௌரவ ஆகமம்

சிவஞானபோதம் - முதல் சூத்திரம்

(பதியுண்மை கூறப்படுதல்)

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌜𑌗𑌤𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸 𑌹𑍃𑌤𑍍𑌵𑍈𑌤𑌤𑍍
𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍍𑌹𑌰𑌃 ॥ ௧ ॥

''ஸ்த்ரீபுந் நபும்'ஸகாதி^{3}த்வாத்
ஜக^{3}த: கார்ய த^{3}ர்னாத்।
அஸ்தி கர்தா ஸ ஹ்ரு'த்வைதத்
ஸ்ரு'ஜத்யஸ்மாத் ப்ரபு^{4}ர்ஹர:।। 1

பதவுரை :

ஸ்த்ரீபுந்நபும்'ஸகாதி^{3}த்வாத்-ஆண், பெண், மூன்றாம் பாலினம் எனச் சுட்டி உணரப்படும் இப்பிரபஞ்ச தொகுதி.

கார்யத^{3}ர்ஶனாத் - காரியமாந் தன்மையை (அநுமானித்து) உணர்தல் (உண்டாகிய செய்யப்படுந் தன்மையால்).

ஜக^{3}த - தோன்றியொடுங்கும் தன்மையுடைய இப் பிரபஞ்சத்திற்கு.

கர்த்தா: அஸ்தி - தோற்றுதலைச் செய்யும் நிமித்த காரணனாகிய கர்த்தா ஒருவன் உளன்.

ஸ ஹ்ருத்வைதத் ஸ்ருஜதி - அவன் இப்பிரபஞ்சத்தை ஒடுக்கி (மீள) உளதாக்குவான்.

அஸ்மாத் ஹர: பிரபுஹு - இதனால் சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளாகிய சிவபெருமானே முதற்கடவுள்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய
சிவஞானபோதம் முதல் சூத்திரம்

''அவன்அவள் அதுஎனும் அவை மூவினைமையின்,
தோற்றிய திதியே: ஒடுங்கிமலத் துளதாம்,
அந்தம்ஆதி என்மனார் புலவர்''.

இதன் பொருள் : அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் சுட்டி உணரப்படும் இப்பிரபஞ்சம் தோன்றி நின்று ஒடுங்கும் தன்மையுடையது. உலகம் சடம். எனவே அதனைத் தோற்றுவித்து, நிறுத்தி, ஒடுக்குதற்குக் கர்த்தா ஒருவர் உண்டு. அந்த கர்த்தா சங்காரகாரணன்.

இந்த உலகம், அந்தக் கர்த்தாவின் வியாபகத்தில் நின்று தோன்றி ஒடுக்குவதால் அவன் ஒருவனே கடவுள். அந்த கடவுள் சிவபெருமானே என நூல் உணர்ந்தோர் கூறுவர்.

இந்த உலகம் முத்தொழிலை உடைய, தோன்றி நின்று ஒடுங்கி மீண்டும் தோன்றும் தன்மையுடையது. இவ்வாறு முத்தொழிலைச் செய்பவன் சங்காரகாரணன் சிவபெருமானே. அவனே தலைவன் என பதிஉண்மையை இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

௨. ஸ்ரீமத் ரௌரவ ஆகம -
சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரம்

(பாச உண்மை கூறப்படுதல்)

𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌸𑌨𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌤𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌃
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑌤𑌃 ।
𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂
𑌆𑌜𑍍𑌞𑌯𑌾 𑌸𑌮𑌵𑍇𑌤𑌯𑌾 ॥ ௨ ॥

''அன்யஸ் ஸன்வ்யாப்திதோனன்ய:
கர்தா கர்மானுஸாரத:।
கரோதி ஸம்ஸ்ருதிம் பும்ஸாம்
ஆஜ்ஞுயா ஸமவேதயா''।। 2

பதவுரை :

கர்தா - மேற்கூறிய சங்காரகாரணாகிய சிவபெருமான்,

அன்ய: அபி - தன் இயல்பால் உயிர்களுக்கு வேறாக விளங்கினாலும்,

வ்யாப்திதோனன்ய: - வியாபகத்தினாலே வேற்றுமையின்றி உயிர்களோடு உடனாகி நின்று,

ஆஞ்ஞுயா ஸமவேதயா - ஆணையென்னும் பரியாயப் பெயருடைய தன்னை விட்டு நீங்காத சிற்சக்தியினாலே,

பும்ஸாம் - ஆன்மாக்களுக்கு,

கர்மானு ஸாரத: - அவற்றின் நல்வினை தீவினை எனும் இருவினைகளுக்கு ஏற்ப,

ஸம்ஸ்ருதிம் கரோதி - சிருஷ்டி முதலிய பஞ்ச கிருத்யங்களைச் செய்கின்றான். ஸமவேதசத்தி என்றது திரோதான சத்தியை ஆகும். இந்த திரோதானசத்தி சிற்சத்தியின் ஒரு கூறு ஆகும்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம்

"அவையே தானே யாய், இரு வினையின்
போக்கு வரவு புரிய, ஆணையின்,
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே".

இதன்பொருள் : முதல்சூத்திரத்தில் கூறப்பட்ட சங்கார காரணாகிய சிவபெருமான், உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நின்று, உயிர்கள் செய்த இருவினையாலும், அவ்வினையை உயிர்க்கு கூட்டும் தனது சக்தியைக்கொண்டு, நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப, உயிர்களை உரிய உடலோடு கூட்டுவதையும், உடலினின்று நீக்குவதையும் (இறத்தல் பிறத்தல்களை) பொருந்தும் வண்ணம் செய்து அருள்கின்றான்.

எவ்வாறு செய்கின்றான் என்றால், மறைப்பாற்றல் (திரோதான சத்தி) வடிவமாகசெய்கிறான். அதாவது அருளாற்றலின் நின்றும் பிரிப்பின்றி வெளிப்படாமல் மறைப்பாற்றல் வடிவமாக நின்று செய்கின்றான்.

இறைவன் பஞ்சக்ருத்யம் (ஐந்தொழில்)செய்கிறான் என்று கூறுதல் வழி, ஆணவம், கன்மம் ,சுத்தமாயை, அசுத்தமாயை, திரோதானசுத்தி என்னும் பஞ்சபாசங்கள் அதாவது பாச உண்மையை இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

3. ஸ்ரீமத் ரௌரவ ஆகம -
சிவஞானபோதம் - மூன்றாஞ் சூத்திரம்.

(பசு உண்மை கூறப்படுதல்)

𑌨𑍇𑌤𑌿𑌤𑍋 𑌮𑌮𑌤𑍋𑌦𑍍𑌰𑍇𑌕𑌾𑌤𑍍
𑌅𑌕𑍍𑌷𑍋𑌪𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌤𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌪𑍇 𑌨𑌿𑌰𑍍𑌭𑍋𑌗𑌤𑍋 𑌬𑍋𑌧𑍇
𑌬𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑌣𑍁𑌸𑍍𑌤𑌨𑍌 ॥ ௩ ॥

"நேதிதோ மமதோத்[3]ரேகாத்
அக்ஷோபரதி போ[3]த[4]த:।
ஸ்வாபே நிர்போ[4]க[3]தோ போதே[4]
போத்த்[4]ருத்வாத் அஸ்த்யணுஸ்தனௌ"।। 3

பதவுரை : நே இதித: - ஆன்மா இலது என்றலானும், மமதோத்[3]ரேகாத்-இது என் உடம்பு எனத் தன்னின் வேறாக உடம்பைக் கருதும் உலக வழக்கம் உள்ளதாலும்,

அக்ஷபோ[3]த[4]த:- ஐம்பொறிகளைக் கொண்டு அறிதலாலும்,

உபரதிபோ[3]த[4]த:- ஐம்பொறிகளும் ஒடுங்கின சொப்பனத் தானத்தில் நிகழ்ந்தவற்றை(கனவின்கண் மயங்கி) அறிதலினானும்,

ஸ்வாபே நிர்போ[4]க[3]தோ:- நித்திரையிலே இன்பதுன்ப நுகர்ச்சி இன்மையானும்,

போ[3]தே[4] போ[3]த்[3]த்[4]ருத்வாத் - குருமுகமாக அறிவிக்க அதாவது ஜாக்கிராவத்தையில் தனது முந்தைய நிலைகளை அறிவதாலும்,

தநௌ - இவையனைத்தும் கூடிய கூட்டமாகிய உடம்பின் கண்ணே,

அணு: அஸ்தி - இவற்றின் வேறாய் (உடம்பின் உள்ளே) உயிரென்பது ஒன்று உண்டு.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதம் மூன்றாஞ் சூத்திரம்.

''உளதுஇலது என்றலின், எனதுஉடல் என்றலின்,
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினை இன்மையின், உணர்த்தஉணர்தலின்,
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா''.

இதன்பொருள் : உள்பொருள் ஒன்றுக்குத்தான் உண்டு அல்லது இல்லை என்று சொல்லும் வழக்கு உண்டு. ஆதலால் இலது என்றவிடத்து ஆன்மா உள்ளது. உடம்பை வேறாக வைத்து எனது உடல் என்று உடையதும் உடைமையுமாகக் கூறப்படுதலால் உடம்புக்கு வேறாய் உடையதாகிய ஆன்மா உள்ளது.

ஐம்புலன்களையும் ஐம்பொறிகளின் வாயிலாகக் கவர்ந்து அறியும் ஆன்மா அவ்வைம்பொறிகளுக்கு வேறாய் உள்ளது. கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் உரைப்பதால் அக்கனவைக் கண்டறிந்து உரைக்கும் ஆன்மா வேறாய் உள்ளது. தூங்கும்பொழுது, இன்பதுன்ப நுகர்ச்சியும், உடம்பின் இயக்கமும் இல்லாமையால் ஆன்மா உளது. தானே உணராது மற்றொன்று உணர்த்த உணர்தலின் அவ்வுணர்த்தும் பொருளுக்கு வேறாய் ஆன்மா உள்ளது. மாயா காரியமாகிய உடம்பின்கண் ஆன்மா உள்ளது.

அதாவது, சூன்யமே ஆன்மா, ஸ்தூலதேகமே ஆன்மா, இந்திரியமே ஆன்மா, சூக்ஷ்ம தேகமே ஆன்மா, பிராணவாயுவே ஆன்மா, பிரம்மமே ஆன்மா என்று கூறும்வாதிகளை மறுத்து ஆன்மா இவற்றின் வேறாய் உள்ளதென்று ஆன்மா (பசு) உண்மையை இச்சூத்திரம் விளக்குகின்றது.

ஆன்மா அறிவித்தால் அறியக்கூடியது என்பதை உணரலாம். உயிர்என ஒன்று உண்டு என்பதை நிறுவும் சூத்திரம் இது. இவ்வாறு முதல்மூன்று சூத்திரத்தாலும் பதி,பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அனுமானப் பிரமாணத்தால் சாதித்து உணர்த்தப்பட்டது.

(ஆ) இலக்கண இயல்

4. ஸ்ரீமத் ரௌரவஆகம - சிவஞானபோதம் நான்காஞ் சூத்திரம்

(பசு இயல்புகூறப்படுதல்)

𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌦𑌨𑍍𑌯𑍋𑌽𑌪𑌿
𑌅𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍂𑌪𑌵𑌤𑍍 ।
𑌅𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌸𑍍𑌥𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌮𑌲𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ ௪ ॥

"ஆத்மாந்த: கரணாத[3]ன்யோ(அ)பி
அன்விதோ மந்த்ரிபூ[4]பவத்।
அவஸ்தா பஞ்சகஸ்த[2]: ஸ்யாத்
மலருத்[3]த[4] ஸ்வத்ரு[3]க்க்ரிய:"॥ 4

பதவுரை : மலருத்[3]த[4]ஸ்வத்[3]ருக்க்ரிய: ஆத்மா - ஆணவமலத்தினால் மறைக்கப்பட்ட தன் ஞானசக்தி (அறிவு) கிரியாசத்தி (செயல்)களையுடைய ஆன்மாவானவன்,

அந்த: கரணாத் அந்ய: அபி - அந்தகரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்னும் இவற்றின் வேறாயினும்,

மந்த்ரிபூ[4]பவத் - அமைச்சரோடு கூடிநின்று தம்தொழில் நடத்தும் அரசன் போல,

அந்வித: (அறிவு நிகழுமாறு) அந்தக் கரணம் முதலியவற்றோடு கூடினவனாகி,

அவஸ்தா[2]பஞ்சகஸ்த[2]: ஸ்யாத் - ஜாக்கிரம் முதலிய ஐந்து அவஸ்தையில் ஆட்பட்டு நிற்பவனாவன்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதம் - நான்காஞ் சூத்திரம்.

''அந்தக் கரணம் அவற்றின்ஒன்று அன்று,அவை,
சந்தித்து ஆன்மாச் சகசமலத்து உணராது,
அமைச்சு அரசு ஏய்ப்பநின்று அஞ்சுஅவத் தைத்தே''.

இதன் பொருள் : ஆன்மாவானது, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களுள் ஒன்று இல்லை எனினும், ஆணவமலத்தோடு கூடியதால் ஏற்பட்ட அறியாமையை நீக்குதல் பொருட்டு உயிர் அந்தக்கரணங்களைக் கூடிற்று. இது எவ்வாறு எனின், உலகில் அரசன் அமைச்சர்களோடு சேர்ந்து பரிபாலனம் செய்வது போல் ஆகும்.

இதன்படி ஆன்மாவாகிய உயிர் ஐந்து அவஸ்தைகளாகிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, ,துரியம், துரியாதீதம், என்ற ஐந்து நிலைகளுக்கு ஆளாகும். அதாவது மேற்சொன்ன கருவி கரணங்களோடு கூடுவதும் பிரிவதுமாக இருப்பதே ஆன்மாவாகிய உயிர் இயல்பாகும் என இச்சூத்திரம் உணர்த்துகின்றது.

கருவி கரணங்களோடு கூடி அவஸ்தையுறுவது ஆன்மாவின் தடத்த லக்ஷணம் எனும் பொது இயல்பாகும்.

5. ஸ்ரீமத் ரௌரவ ஆகம - சிவஞானபோதம்

ஐந்தாஞ் சூத்திரம்

(பாசத்தின் இயல்புகூறப்படுதல்)

𑌵𑌿𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 𑌪𑍁𑌂𑌸𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍
𑌨 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌶𑌂𑌭𑍁𑌨𑌾 ।
𑌤𑌦𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌿 𑌶𑌿𑌵𑌶𑍍𑌚𑍇𑌨𑍍 𑌨
𑌕𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌯𑍋𑌵𑌤𑍍 𑌸 𑌤𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௫ ॥

''வித^{3}ந்த்யக்ஷாணி பும்'ஸார்தா^{2}ன்
ந ஸ்வயம்,ஸோ(அ)பி ஶம்பு^{4}னா।
தத்^{3}விகாரி ஶிவஶ்சேத் ந
காந்தோ (அ)யோவத் ஸ தம்' நயேத்''।। 5

பதவுரை : *அக்ஷாணி பும்'ஸார்தா^{2}ன் வித^{3}ந்தி* - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் இந்திரியங்கள் ஆன்மாவால் (புருடனால்) தத்தம் விடயங்களை அறிகின்றன,

ஸ்வயம் நவித^{3}ந்தி - அந்த ஐம்பொறிகளும் தாமே அறியமாட்டா. அதுபோல,

ஸ: அபி ஶம்பு^{4}னா வேததி - ஆன்மாவும் சிவபெருமானாலேயே வினைப்பயன்களை அறிந்து அனுபவிக்கும் இங்கனமின்றி,

ஸ்வயம்ந வேததி - அந்த ஆன்மா தானே அறியமாட்டாது.

ஶிவ: விகாரீ இதிசேத் - சிவன் செலுத்தும் காரியத்தில் ஈடுபடுவதால் தன் இயல்பிலிருந்து மாறுபட்டு விகாரப்பட்டு விளங்குவானோ எனில்,

ந - அவ்வாறு விகாரப்படுவதில்லை. *ஸ:* - அவன்,

காந்தோ (அ)யோவத் - காந்தம் இரும்பைத் தன் சந்நிதி மாத்திரை தனது இருப்பினால் மட்டும் வலித்து இழுத்துக் கொள்வதை போல,

தம்'நயேத் - ஒவ்வொரு ஆன்மாவையும் தான் விகாரமின்றி நின்று தன் ஸங்கல்பத்தால் நின்று செலுத்துவான். ஆகலான் அவன் விகாரமுடையவனல்லன்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய
சிவஞானபோதம் - ஐந்தாஞ் சூத்திரம்.

''விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு,
அளந்துஅறிந்து அறியா: ஆங்குஅவை போலத்,
தாம்தம் உணர்வின் தமிஅருள்,
காந்தம் கண்ட பசாசத்து அவையே''

இதன்பொருள் : மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐம்பொறிகள், தத்தம் அளவில் புலன்களால் உலகப்பொருட்களைக் கண்டறிந்தும், உயிரை அறியமாட்டா. அவ்வாறு அறியமாட்டாத அந்த இந்திரியங்கள் போல, தம்மை இயக்குகின்ற முதல்வனது அருளை, உயிர் தம் அளவுக்குட்பட்ட உலகப்பொருளை அறிந்தும் தம் உணர்வினாலே முதல்வனை அறியமாட்டா.

இது எவ்வாறு எனில், காந்தத்தின் முன் இரும்புத்தூள் இழுத்துக் கொள்ளப்படுவதுபோல, உயிர் முன் மெய், கண் முதலிய ஐம்பொறிகளும், முதல்வனாகிய இறைவன்முன் உயிர்களும் தொழிற்படுகின்றன.

அதாவது இந்திரியங்கள் உயிரால் விடயங்களை அறிந்தும், அந்த இந்திரியங்கள் தம்மையும் உயிரையும் அறியமாட்டா. அவ்வாறே உயிர் இறைவனுடைய மறைப்பாற்றலால் ஐந்தவஸ்தைப் பட்டும், அவ்வுயிர் தன்னையும் இறைவனையும் அறியாது.

இறைவனால் உயிர் அவ்வாறு அறிவது, காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுவதைப் போன்றது. எனவே ,ஆன்மா இறைவனாலேயே அறியும் என்பதும், உயிர் அறியும் காலத்து இறைவனோடு அடங்கிநின்று அறியும். வேறுபாடு காரணமாக இறைவன் விகாரப்படான் என கூறுவதை உணரலாம். இச்சூத்திரத்தில் பாசத்தின் இயல்பு உணர்த்தப்படுகின்றது.

6. ஸ்ரீமத் ரௌரவ ஆகம - சிவஞானபோதம் ஆறாஞ் சூத்திரம்.

(பதி இயல்பு கூறப்படுதல்)

ஸுஜ்ஶ்யம் செதஸஜ்ஹாவொ
ஜ்ஶ்யம் செஜ்ஜடிஜா ஹவெத் ।
ஶம்ஹொஸ்தஷ்யதிரெகெண ஜ்ஞெயம்
ரூவம் விஜுஸ்பஜ்யா: ॥ ஸு ॥

''அத்^{3}ரு'ஶ்யம் சேத்^{3} அஸத்^{3}பா^{4}வோ
த்^{3}ருஶ்யம் சேத் ஜடி^{3}மா ப^{4}வேத்।
ஶம்போ^{4}ஸ்தத்^{3} வ்யதிரே கேண
ஞேயம் ரூபம்' வித்^{3}ர்பு^{3}தா^{4}:''।। 6

பதவுரை : *ஶம்போ^{4}: ரூபம்* - சிவப்பரம்பொருளின் சொரூபமானது,

அத்^{3}ரு'ஶ்யம்' சேத்^{3} - ஒருவகையாலும் காணப்படாத தாயின்,

தஸ்ய அஸத்^{3}பா^{4}வ: பவேத் .- அந்தச் சிவபெருமானுக்கு (முயற்கொம்பு போன்று) இன்மைத் தன்மை என்பது நேர்ந்து விடும்,

த்^{3}ரு'ஶ்யம்'சேத் - துணி, பானை முதலியன போன்று சுட்டி அறியப்படுவதாயின்,

தஸ்ய ஜடி^{3}மா ப^{4}வேத் - யாதுஒன்று சுட்டி அறியப்படுவதோ அது சடப்பொருள் எனும் இலக்கணத்தால், சிவபெரு மானுக்கு சடத்தன்மை உள்ளதாகி விடும்.

தத்^{3}வ்யதிரேகேண - அறியப்படாததும் அறியப்படுவதும் என்னும் இந்த இரண்டிற்கும் வேறாக உள்ள அநுபூதிஞானம் எனும் பதிஞானத்தால்,

ஜ்ஞேயம்'இதி வித்^{3}ர்பு^{3}தா^{4}: -அவனது சொரூபம் நன்கு அறியப்படும் என்று ஞானிகள் அறிவார்கள்.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய
சிவஞானபோதம் - ஆறாஞ் சூத்திரம்.

''உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்,
இரு திறன் அல்லது சிவசத் தாம்என,
இரண்டு வகையின் இசைக்கும்மன் னுலகே''.

இதன்பொருள் : முதற்பரம்பொருளாகிய இறைவன், பிரமாணங்களால், ஐம்பொறிகளால் அறியப்படும் தன்மை உடையது என்றால், பிரமாணங்களால் அறியப்படும் பிரபஞ்சமாகிய இவ்வுலகம் அழிவதுபோல், முதற்பொருளாகிய இறைவனும் அழியக்கூடிய பொருளாகிய அசத்து என பொருளாகிவிடும்.

இனி முதற்பொருளாகிய இறைவன் எந்த வகையாலும் அறியப்படாத தன்மையுடையது என்றால், முயற்கொம்புபோல் இல்பொருளாகிவிடும்.

எனவே மேற்கூறிய இவ்விருவகையும் ஆகாமல், ஒரு வகையால் அறியப்படாமையும், ஒரு வகையால் அறியப்படுத்தலும் ஆகிய இருவகை இயல்பினை உடைய சிவசத்து ஆக இறைவன் உள்ளதாக உயர்ந்த ஞானியர் கூறுவார்கள் என இச்சூத்திரத்தில் பதியின் இயல்பு உணர்த்தப்படுகின்றது.

அதாவது சிவசொருபத்தை, பாசஞானம் பசுஞானத்தால் அறியமுடியாது. சிவஞானம் ஒன்றினாலேயே அறியப்படும் என்பதாம்.

இவ்வாறு அடுத்த மூன்று சூத்திரத்தாலும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புதனை (இலக்கணத்தை) அனுமானப் பிரமாணத்தால் சாதித்து உணர்த்தப்பட்டது.

உண்மை அதிகாரம்.

(இ) சாதன இயல்

7. ஸ்ரீமத் ரௌரவஆகமம் - சிவஞான போதம் ஏழாஞ் சூத்திரம்.

(ஆன்மாவின்சிறப்பு கூறப்படுதல்)

நாஙிஜ் தஸநியள கிஞ
ந விதஸெஜ் உஜெ ஜிய: ।
ப்ரவஞ்சஶிவயோவெதா
யஸ் ஆதா தயொঃ வ்ருயக் ॥ எ ॥

''நாசிச் சித்ஸந்நிதௌ^{4} கிந்து
ந வித்தஸ்தே உபே^{4} மித^{2}:।
ப்ரபஞ்ச ஶிவயோர்வேத்தா
யஸ்ஸ ஆத்மா தயோ ப்ரு'த^{3}க்''।।

பதவுரை : சித்ஸந்நிதௌ' அசித் ந வேததி - சிவபெருமானாகிய சித்தின் சந்நிதியில் பிரபஞ்சமாகிய அசித்து அறியமாட்டாது, அதாவது விளங்கித் தோன்றாது. ஆதலால்,

தே உபே^{4}மித: நவித்த:- சிவமும் பிரபஞ்சமும் என்னும் இரண்டும் ஒன்றை ஒன்று அறியமாட்டா,

ய: ப்ரபஞ்ச ஶிவயோர்வேத்தா - எவன் பிரபஞ்சத்தையும் சிவனையும் அறிகின்றானோ,

ஸ: - அவன்,

தயோப்ருத^{3}க் - சிவம் பிரபஞ்சம் எனும் இரண்டிற்கும் வேறான,

ஆத்மா ஸ்யாத் - ஆன்மா என விளங்குவதாக உணர்க.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய சிவஞானபோதம் - ஏழாஞ் சூத்திரம்.

''யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்,
சத்தே அறியாது; அசத்துஇலது; அறியாது;
இருதிறன் அறிவுளது; இரண்டலா ஆன்மா''.

இதன்பொருள் : சிவமாகிய சத்தின் முன்னர் உலகப் பொருளாகிய அசத்து யாவையும் விளங்கித்தோன்றாது. ஆதலால் சிவமாகிய சத்து அசத்தாகிய பிரபஞ்சத்தை அறிதல் செய்யாது. அசத்து ஆகிய பிரபஞ்சம் அறிவில்லாத ஜடம். ஆதலால் சத்து ஆகிய சிவத்தை தானே அறிதல் செய்யாது. ஆதலால், சத்து, அசத்து ஆகிய இரண்டையும் அறியும் அறிவை உடையது ஒன்று உண்டு. சிவமாகிய சத்தினையும், உலகப்பொருளாகிய அசத்தினையும் அதுவதுவாய் நின்று அறியவல்லதாம். அது மேற்கூறிய சத்தும் அசத்தும் இல்லாது சதசத்தாய் விளங்கும் (ஆன்மா)உயிர் ஆகும்.

இப்பகுதி சாதன இயல் என்பதால் சாதித்தற்குரிய அதிகாரியின் இயல்பு கூறப்படுகிறது. அதாவது ஆன்மாவின் சிறப்பு இயல்பு கூறப்படுகின்றது. சத்து - சிவம். அசத்து - பிரபஞ்சம். சதசத்து - ஆன்மா.

இதன்படி இச்சூத்திரம் ஆன்மாவுக்கான சிறப்பியல்பு (சொருபலக்ஷணம்), சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல் உணர்த்தப்படு கின்றது.

8. ஸ்ரீமத் ரௌரவஆகம - சிவஞானபோதம் - எட்டாஞ் சூத்திரம்

(ஆன்மா செய்யவேண்டிய சாதனம், சாதனம் வரும் வழி, சாதித்ததனால் பெறப்படும் பயன் கூறப்படுதல்)

ஷ்ஹிசுவா ஸஹெஹந்த்ரியவ்யாயெ:
சுவாம் ந வெத்ஸீதி வொயித: ।
ஊெக்கெவதாந் ஹுருணாநநெ்யா
யநு: வ்ராவ்நொதி தத்வஃ ॥ அ ॥

''ஸ்தி^{2}த்வா ஸஹேந்த்^{3}ரிய வ்யாதை^{4}:
த்வாம், ந வேத்ஸீதி போ^{3}தி^{4}த: ।
முக்த்வைதான் கு^{3}ருணா நந்யோ
த^{4}ன்ய: ப்ராப்னோதி தத்பத^{3}ம்॥

பதவுரை : த^{4}ன்ய: - முன்பிறப்புகளில் செய்த பயனால், புண்ணிய முடைய ஆன்மாவானவன்,

கு^{3}ருணா - ஞானாசாரியனாலே,

இந்த்^{3}ரியவ்யாதை^{4}: ஸஹ ஸ்தித்வா - நீ ஐம்பொறி களாகிய வேடரோடு கூடியிருந்து,

த்வாம்' ந வேத்ஸீதி போ^{3}தி^{4}த:- உன் பெருமையை நீ அறியவில்லை, உன் பெருமையாவது இது என அறிவுறுத்தப்பட்ட வனாகி,

ஏதான் முக்த்வா - இவ் ஐம்பொறிகளாகிய வேடுவர்களை விட்டு நீங்கி,

அனன்ய: தத்பத^{3}ம் ப்ராப்னோதி - சிவத்திலிருந்து வேறுபடாதவனாகிச் சிவபெருமான் திருவடியை சிவானந்தப் பேற்றை அடைகின்றான்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய சிவஞானபோதம் - எட்டாஞ் சூத்திரம்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்,
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு,
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''.

இதன்பொருள் : ஆன்மா, முற்பிறப்புகளில் செய்த புண்ணியப்பயனால் இதுவரை அந்தர்யாமியாய் உள்நின்று உணர்த்திய இறைவன், இப்பொழுது சிவஞானத்தை அருளும் பொருட்டு குருவடிவமாக எழுந்தருளி சிவதீக்ஷை செய்துவித்து, அரசகுமாரனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடருக்கு உட்பட்டு வளர்ந்து உன் பெருமைகளை அறியாமல் மயங்கி துன்பப்பட்டாய். உன் பெருமை இத்தகையது என உணர்த்திட அறிவுறுத்தவே.

ஆன்மாவானது ஐம்பொறிகளை விட்டு நீங்கி இறைவனோடு அந்நியம் இன்றி, சிவப்பரம்பொருள் திருவடியை அடைகின்றது. அதாவது, சிவமே குருவாய் எழுந்தருளி உபதேசிக்க,அந்த உபதேசத்தால் ஆன்மா ஐம்புலனைவிட்டு சிவன்கழல் பற்றுகின்றது என்பதை காணலாம்.

உயிர்கள் தவம் செய்ய வேண்டும். இதுவே சாதனம். தவத்தினாலேயே சிவஞானம் கிட்டும் என்பது இச்சூத்திரத்தில் உணர்த்தப்படுகின்றது.

9. ஸ்ரீமத் ரௌரவ ஆகம - சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம்.

(சாதனம் அநுஷ்டிக்கும்முறை)

ஊிஜ்ஜூஶாதூநிஜ்ரூஷெ்ஶம்
தூக்ஙவா வூத்திஐரீஊிகாஂ ।
ஞஸ்வா ஶிவபஉஜூாயாம்
ஞ்யாயெதுஂஊாக்ஷரீம் ஸூயீ: ॥ கூ ॥

''சித்^{3}த்^{3}ருஶாத்மநி த்^{3}ரு'ஷ்ட்வேஶம்'
த்யக்த்வா வ்ரு'த்தி மரீசிகாம்।
லப்^{3}த்^{4}வா ஶிவபத^{3}ச்சா^{2}யாம்
த்^{4}யாயேத் பஞ்சாக்ஷரீம்' ஸுதீ^{4}ஹி''।।

பதவுரை : ஸுதீ^{4}ஹி - ஞானம் வாய்க்கப்பெற்ற நல் ஆன்மாவானவன்,

ஈஶம் சித்^{3}த்^{3}ரு'ஶாத்மநி த்^{3}ரு'ஷ்ட்வா - (பாச அறிவி னாலும் பசு அறிவினாலும் உணரப்படாத) முதல்வனைச் சிவஞானமாகிய கண்ணினாலே தன் அறிவின்கண்ணே கண்டு,

வ்ரு'த்தி மரீசிகாம் த்யக்த்வா - கானல்நீர் போன்றதான நிலையற்ற பிரபஞ்ச விவகாரங்களில் இருந்து தன்னை விடுவித்து கொண்டு,

ஶிவபத^{3}ச்சா^{2}யாம் லப்^{3}த்^{4}வா - சிவபரம்பொருளின் திருவடியை முழுமையாக அடைந்து,

பஞ்சாக்ஷரீம் த்^{4}யாயேத் - உயர்ந்த முக்திப் பேற்றை அளிக்கவல்ல, முக்திப் பஞ்சாக்ஷரத்தைத் தியானிக்கக்கடவன்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய
சிவஞானபோதம் - ஒன்பதாஞ் சூத்திரம்.

''ஊனக்கண் பாசம் உணராப் பதியை,
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி,
உராத்துனைத் தேர்த்துஎனப் பாசம் ஒருவத்,
தண்நிழலாம் பதிவிதி எண்ணும்அஞ்சு எழுத்தே''.

இதன்பொருள் : துணைஇன்றி அறியமுடியாத பசு அறிவாலும், மற்றும் பாச அறிவாலும் பதியை அறியமுடியாது. ஞானகுரு உபதேசித்த நெறியில் நின்று திருவடி ஞானத்தால், உயிர் ஆகிய தன் அறிவின்கண்ணே நாடுவாயாக.

நாடுங்கால், உலகமாகிய பாசக்கூட்டம், பொய்யாய்க் கழிவது என்று உணர்ந்து, அந்த பாசக்கூட்டத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, பதிஞானமே பிறவித்துயராகிய வெப்பத்துக்கு தண்நிழலாம், அதாவது குளிர்ந்த நிழலாய் திருவடிக் காட்சி வெளிப்பட்டு விளங்கி அருளும்.

இவ்வாறு பாசத்தில் இருந்து நீங்கி திருவடிஞானத்தால் பதியினைக் கண்ட காட்சி, நீங்காது நிலைத்தற் பொருட்டு, திரு ஐந்தெழுத்தை (முக்திபஞ்சாக்ஷரத்தை) விதிப்படி எண்ணுவாயாக.

பாச ஞானம், பசு ஞானங்களால் சிவம் அறியப்படமாட்டாது. எனவே சிவஞானத்தாலே பதியாகிய சிவத்தை அறியவேண்டும். உலகத்தை கானல்நீர் போல, நிலையற்றதுஎனக் கண்டு கழித்தால்தான், பதிஞானம் விளங்கித்தோன்றும்.

பதிஞானத்தால் இறைவனைக் கண்டபொழுதும், பழக்க வாசனையால், மீண்டும் உலகத்தைப் பற்றாது இருத்தல் பொருட்டு, முத்தி பஞ்சாக்ஷரத்தை எப்பொழுதும் தியானிக்கவேண்டும். அதாவது ஜபிக்கவேண்டும்.

வாசனாமலம் கழிய பஞ்சாக்ஷர ஜபம் இடைவிடாது செய்யவேண்டும்என சாதனம் அனுஷ்டிக்கும் முறை இச் சூத்திரத்தில் உணர்த்தப்படுகின்றது.

(ஈ) பயன் இயல்.

10. ஶ்ரீமத் ரௌரவ ஆகம

சிவஞானபோதம் - பத்தாஞ் சூத்திரம்.

(பாச நீக்கம் கூறப்படுதல்)

ஶிவெநைக்யம் ஹதஸிஜ:

தஜயீநः ஸ்வ வ்ருத்திகः ।

மலமாயாஜ்யஸம்ஸ்ப்ருஷ்டோ

ஹவதி ஸ்வாநுஹூதிமாந் ॥ கo ॥

''ஶிவேனைக்யம்' க^{3}தஸித்^{3}த^{4}:
தத^{3}தீ^{4}ன ஸ்வ வ்ரு'த்திக:।
மலமாயாத்^{3} யஸம்'ஸ்ப்ரு'ஷ்டோ
ப^{4}வதி ஸ்வானுபூ^{4}திமான்''।।

பதவுரை : *ஶிவேனைக்யம்'க^{3}தஸித்^{3}த^{4}:-* சிவபரம் பொருளோடு ஐயக்கியப்பட்டவனாய், சிவஞானமே வடிவமாக நின்று பக்குவமடைந்தவனாகிய ஆன்மா,

தத^{3}தீ^{4}னஸ்வ வ்ரு'த்திக:- சிவத்தின் அருளாற்றலுக்கு உட்பட்டு நிற்றலாகிய தனது விருத்தியை உடையவனாகி,

மலமாயாத்^{3} யஸம்' ஸ்ப்ரு'ஷ்டோ - மலம், மாயை முதலிய கன்மங்களால் பாதிக்கப்படாதவனுமாகி,

ப^{4}வதி ஸ்வானுபூ^{4}திமான் - சுவானுபூதியாகிய சிவபோகப் பேறு பெற்று உய்கின்றான்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய
சிவஞானபோதம் - பத்தாஞ் சூத்திரம்.

"அவனே தானே ஆகிய அந்நெறி,
ஏகன் ஆகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே."

இச்சூத்திரம் பாசநீக்கம் பற்றி கூறுகின்றது. அதாவது ஒன்பதாம் சூத்திரத்தில் சாதனம் செய்யும் முறை கூறப்பட்டது. இந்த இயலில் அந்த சாதனத்தால் விளையும் பயன் உரைக்கப் படுகிறது.

இதன்பொருள் : ஞானக்கண்ணால் காணப்படும் சிவம் உயிரோடு உடனாய் நின்று ஒற்றுமைப்பட்டு நிற்கின்றது.

அதுபோல உயிர்கள் முத்திநிலையில் சிவத்தோடு உடனாய் நின்று, இன்பத்தை அனுபவிப்பது தான் என நினையாமல், அந்த சிவத்தோடு ஐக்கியப்பட்டு சிவமேயாய், அவன் அருள் வழியில் சிவப்பணியில் நின்றிட, ஆணவமலம், மாயாமலம், வலிய கன்ம மலமும் அகலும்.

அதாவது ஏகனாகி இறைபணி நிற்க, உயிர்கள் அடையும் இன்பதுன்பங்கள் உயிரை அடையாது. உயிரை வருத்தாது.

(ஏகனாகி இறைபணி நிற்பது - நின்மல துரியநிலை)

இதன்படி, சிவத்தோடு ஏகனாகி நிற்றலின் பயன் ஆணவமல நீக்கமும், சிவனருள் வழி ஆகிய சிவகைங்கர்யத்தில் நிற்றலின் பயன் மாயா கன்மங்களின் நீக்கமும் (பாசநீக்கம்) உண்டாகும் என இச்சூத்திரத்தில் உணர்த்தப்படுகின்றது.

11. ஸ்ரீமத் ரௌரவ ஆகம சிவஞானபோதம் பதினொராஞ் சூத்திரம்

(சிவப்பாத கமலத்தை அடைதல்/சிவப்பேறு பெறுதல்)

𑌦𑍃𑌶𑍋𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾
𑌤𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑌾 𑌶𑌿𑌵𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑌰𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑍇 ॥ ௧௧ ॥

''த்³ரு'ஶோர் த³ர்ஶயிதா சாத்மா
தஸ்ய த³ர்ஶயிதா ஶிவ:।
தஸ்மாத் தஸ்மின் பராம்' ப⁴க்திம்
குர்யாதா³த்மோபகாரகே''।।

பதவுரை : *த்³ருஶோர்த³ர்ஶயிதா ச ஆத்மா* - கண்களுக்கு உருவத்தைக் காட்டுபவனும் காண்பவனும் ஆன்மாவே ஆகும் (அதுபோல்),

தஸ்ய த³ர்ஶயிதா ஶிவ:- ஆன்மாவுக்குப் பொருளைக் காட்டு பவனும், அந்த ஆன்மாவோடு ஒன்றிநின்று காண்பவனும் சிவனே ஆவான்,

தஸ்மாத் - ஆதலால்,

ஆத்மோபகாரகே தஸ்மின் - அளவுகடந்த கருணையால் ஆன்மாவுக்கு உபகாரம் செய்பவனான அந்தகருணைக் கடவுளாகிய சிவபெருமானிடத்தில்,

பராம்' ப⁴க்திம் குர்யாத் - மேலான உத்தமோத்தம பக்தியை செய்யக் கடவன். (செய்யவேண்டும்).

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் அருளிய சிவஞானபோதம் - பதினோராஞ் சூத்திரம்.

''காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்,
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன்கழல் செலுமே''.

இதன்பொருள் : கண்ணுக்கு உருவத்தை காணும்படி காட்டியும், அந்தக் கண்ணோடு உயிர் கலந்து நின்று அவ்வுரு வத்தைக் கண்டும் வருகின்ற உயிர்போல, அறிவித்தால் அறியும் தன்மையுடைய உயிர்க்குப் பொருளை அறியும்படிச் செய்ய இறைவன், அந்த உயிரோடு கலந்துநின்று, காட்டியும் தானும் உடன் நின்று காண்கின்றான்.

ஆதலின் அத்தன்மையினை உணர்ந்து, இறைவன் உயிர் களோடு கலந்து நிற்கும் அந்த அத்துவித நிலையை மறவாது, உறுதியாக நின்று இடையறாத அன்பு செய்ய வேண்டும்.

அந்த அன்பினாலேயே சிவபெருமான் திருவடியைக கூடும் சிவானந்த அனுபவத்தை, சிவப்பேற்றை உயிர்கள் பெற்று உய்யும். அதாவது, கண்களுக்கு ஒரு பொருளைக் காட்டுபவனும் ,கண், காணப்படும் பொருள் ஆகிய இரண்டினோடும் ஒன்றி நின்று காண்பவனும் ஆன்மாவே. அதுபோன்று, ஆன்மாவுக்கு பொருளை அறிவிப்பானும், அந்த ஆன்மாவோடு ஒன்றிநின்று அறிபவனும் சிவனே.

இதன்படி இச்சூத்திரத்தில், இறைவனிடம் உத்தமமான வைராக்ய பக்தியை, இடைவிடாத அன்பை செலுத்திட ஆன்மா சிவப்பேறு அடையும் என உண்மைஞானம் உணர்த்தப்படுகின்றது.

12. ஸ்ரீமத் ரௌரவஆகம
சிவஞானபோதம் - பன்னிரண்டாம் சூத்திரம்
(சிவஞானிகள் அனுஷ்டிக்கும் தன்மை)

𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑌤𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂
𑌭𑌜𑍇𑌦𑍍𑌵𑍇𑌷𑌂 𑌶𑌿𑌵𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌏𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑍋𑌧𑍇
𑌶𑍈𑌵𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌮𑍍 ॥ ௧௨ ॥

"முக்த்யை ப்ராப்ய ஸதஸ்தேஷாம்'
ப^{4}ஜேத்^{3} வேஷம்' ஶிவாலயம்।
ஏவம்' வித்^{3}யாச் சி^{2}வஜ்ஞானபோ^{3}தே^{4}
ஶைவார்த^{2}நிர்ணயம்"॥

பதவுரை : *முக்த்யை ஸத: ப்ராப்ய* - முக்திப்பேறு பொருட்டு, ஜீவன்முக்தர்களாகிய ஆச்சார்யர்களை அடைந்து,

தேஷாம் வேஷம் ஶிவாலயம் - அவர்களுடைய திருவேட தோற்றத்தையும், சிவபரம்பொருள் வீற்றிருக்கும் திருக்கோயிலையும் வழிபடுக.

ப^{4}ஜேத்^{3} - முறையாக பக்தியோடு வழிபடுக.

ஏவம் - இவ்வாறே,

சி^{3}வஜ்ஞானபோ^{3}தே^{4} - சிவஞானபோதம் என்னும் இந்நூலில்,

ஶைவார்த^2 நிர்ணயம் வித்^{3}யாத் - சைவாகமங்கள் அனைத்திலும் கூறுப்படும் பொருள் நிச்சயம் இதுவே என உணர்க. அதாவது உணர்த்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ மெய்கண்டதேசிகர் அருளிய
சிவஞானபோதம் - பன்னிரெண்டாஞ் சூத்திரம்.

''செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா,
அம்மலங் கழீஇ, அன்பரோடு மரீஇ,
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே''.

இதன்பொருள் : சிவஞானிகள் சிவனை அடைந்த பின்னரும், தேக சம்பந்தம் இருக்கும்வரை, பிராரத்துவ வாசனை தாக்காது இருக்கும் வழியை கூறும் சூத்திரம் இது.

ஜீவன் முக்தனாகிய ஆன்மாவினைப் பயன் சார்ந்து உலக விவகாரங்களில் ஈடுபடும் பொழுது, செம்மையான மலர் போன்ற இறைவனுடைய திருவடியை அணைய ஒட்டாமல், அந்தத் திருவடியை மறக்கும்படியாக ஆணவம் முதலிய மும்மலங்களும் செய்விக்கும்.

அந்நிலையில் இதனைத் தடுக்க ஜீவன்முக்தர்கள் உடம்போடு கூடி வாழும் காலத்தில், அவர்களுடைய அறிவு (ஞானம்) புறத்தே செல்லும்பொழுது மும்மலப் பற்றை நீக்குவதிலும், அவர்களது ஆசை (இச்சா) அன்பரொடு கூடுவதிலும், அவரது செயல் (கிரியா) திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுவதுமாகச்செல்லும் என்பதாம்.

அதாவது மும்மலமும் பற்றாமல் இருக்கும், மெய்ஞானி களோடு கலந்து கூடியும், அவர்களது விபூதி ருத்திராக்ஷ திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவபெருமானாகவே கண்டு வழிபட்டு சிவானுபூதி நிலையில் நிற்கவேண்டும்.

இதன்படி இச்சூத்திரத்தில் ஆன்மாவானது இந்த தேகம் சம்பந்தம் உள்ளவரை, மலவாசனை பற்றாமல் இருக்க, மெய்ஞானி களோடு கூடியும், அவர்கள் திருவேடத்தையும் சிவாலயத் தையும் சிவபெருமானே என்று கண்டு வழிபட்டு சிவ பாவனையில் ஐக்கியமாகி நிற்பார்கள் என உணர்த்தப்படு கின்றது.

திருச்சிற்றம்பலம்.
சிவார்ப்பணம்.

(1) ஸ்ரீ நந்தியம்பெருமான் ஆகம சிவஞானபோதம் உபதேசம் பெற்ற வரலாறு.

அகண்டாகார நித்ய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் ஸ்ரீ ஸதாசிவ மூர்த்தியாய் திருவுருவம் கொண்டு மகாசங்காரகாலத்தின் இறுதியிலே உலகங்களை மீண்டும் படைத்து ஈசானம், தத்புருஷம், அகோரம் ,வாமதேவம், ஸத்யோஜாதம் என தம் ஐந்து திருமுகங்களாலும் வேதங்களையும், காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளிச்செய்தார்.

இவற்றுள், காமிகம் முதல் சுப்ரபேதம் வரை உள்ள முதல் பத்து ஆகமங்களை பிரதிசங்ஹிதை முறையில் பிரணவர் முதலாகிய பத்துபேர்களுக்கும், விஜயம் முதல் வாதுளம் ஈறாக உள்ள மற்ற பதினெட்டு ஆகமங்களை அநாதி ருத்திரர் முதலான பதினெட்டு பேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொர் ஆகமம் என்ற முறையில் உபதேசிக்கப்பட்டு, இவர்களிடம் உபதேசம் பெற்றவர்கள் என அறுபத்திஆறு பேர்கள் ஆகம உபதேசம் பெற்றனர்.

அடுத்தபடியாக மற்றொரு முறையில், ஸ்ரீ ஸதாசிவமூர்த்தி ,இருபத்தெட்டு சிவாகமங்களும் மஹௌக முறையில் அஷ்ட வித்யேஸ்வரர்களில் முதலாமானவராகிய ஸ்ரீ அனந்த தேவருக்கு உபதேசமாக அருளிச்செய்தார். ஸ்ரீ அனந்தேஸ்வரர் நூற்றுப் பதினெட்டு ருத்திரர்களில் முதன்மையானவரான ஸ்ரீ கண்ட ருத்திரருக்கு அனைத்து ஆகமங்களையும் உபதேசஞ் செய்தார். ஸ்ரீகண்டருத்திரர் சிவாகமங்களை முனிவர்களுக்கும் யோகி களுக்கும் கொண்டுசெல்ல கருதி முதலில் ஸ்ரீ நந்தியம் பெருமானுக்கு அனைத்து ஆகமங்களையும் உபதேசித்து அருளிச்செய்தார்.

அனைத்துஆகமங்களையும் உபதேசம் பெற்று உணர்ந்த நந்தியம்பெருமான், ஸ்ரீகண்டருத்திரரை வணங்கிப் போற்றி, சிவாகமங்கள் தோறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற் பாதங்களிலும் பொருள்கள் சிறுபான்மை வெவ்வேறாகக் மாறுபட்டு உள்ளதாக தோன்றுகின்றது. எனவே அவற்றுள் மாறுபடாத வகையில் உண்மையாவது இதுவென்று உணர்த்தி அருளிச் செய்ய வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்திட, ஸ்ரீகண்ட ருத்திரர் கருணையோடு பதில் கூறினார்.

''ஸ்ரீ அனந்ததேவர் எமக்கருளிச் செய்தவாறே கூறுகின்றோம். கேட்பாயாக நந்தியே,

கற்பங்கள் தோறும் படைப்பு வேறுபாடும், கேட்போர் கருத்து பக்குவமும் வேறுபாடும் என்பதால், ஆகமங்களில் உள்ள சரியை முதலிய முதல் மூன்று பாதங்களும் அந்தஅந்த கற்பக்காலத்தில் உள்ள உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்ப உரைக்கப்பட்டன. எனவே ஒவ்வொரு ஆகமங்களின் சரியாயாதி மூன்று பாதங்களும் அதன் வழிமுறைகளும் வெவ்வேறாகத் தோன்றும்.''

★ஆதலால் எவர் எந்த ஆகமத்தின்படி சிவதீக்ஷை பெறுகிறாரோ அவர் அந்த ஆகமத்தின்படி அனுஷ்டானம், சிவபூஜை என கடைப்பிடிக்கவேண்டியது.

அதுபோல் ஒருகோயில், எந்த ஆகமத்தின்படி கோயில் எழுப்பப் பட்டதோ பிரதிஷ்டை செய்யப்பட்டதோ அந்த ஆகமத்தின்படியே கோயில் வழிபாடுகளும் பூஜைகளும் உத்ஸவங்களும் அந்த அந்த ஆகமங்களின்படி நடத்தவேண்டியது ஆகும்.

ஆனால், ஆகமங்களின் ஞானபாதம் என்பது பொருட் தன்மை அதாவது பொருள்களின் உண்மை இயல்பை உணர்த்துவது என்பதால், அனைத்து ஆகமங்களின் ஞானபாதக் கருத்தும் மாறுபடாது. அவ்வாறு வேறுபடுவதாக தோன்றும் ஞானபாதக் கருத்துகள், தூல அருந்ததி நியாயம் பற்றி கூறப்பட்டனவே அன்றி, உண்மையில் அவை மாறுபட்டு நிற்பன அல்ல. எனவே ஆகமத்தின் ஞானபாதம் வேறுபாடாக கூறப்பட்டனவல்ல என்பதை உணர்தல் வேண்டும்.

இதனைத் தெளிவாக உணர்த்தும் பொருட்டே, இருபத்தெட்டு ஆகமங்களுள் ஒன்றான, ரௌரவஆகமத்துள் ஞானபாதத்தில் பாசவிமோசனப் படலத்தில் பன்னிரு சூத்திரத்தால் சிவஞான போதம் என்பதோர் படலம் கூறப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து கேட்போர்க்கு எல்லா ஆகமப் பொருள்களும் வேறுபாடின்றி இனிது விளங்குவதோடு ஐயமும் நீங்கும் எனக்கூறி, அத்தகைய உயர்ஞானமாக விளங்கக்கூடிய ரௌரவ ஆகம சிவஞான போதத்தை நந்தியம்பெருமானுக்கு முதலில் உபதேசித்து அருளினார்.

நந்தியம்பெருமான் சிவஞானபோத உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தே சிவாகமங்களில் வேறுபாடு போன்ற எல்லா ஐயங்களும் நீங்கி, மெய்ஞானம் பெற்று உணர்ந்தார்.

இவ்வாறு ஸ்ரீ நந்தியம்பெருமானின் சந்தேகம் தீர்க்கும் பொருட்டு ஸ்ரீகண்ட ருத்திரர் உபதேசம் செய்து அருளியதே இச் சிவஞானபோதமாகும்.

ஸ்ரீ நந்தியம்பெருமான் சிவஞானபோத உபதேசக்காட்சி

பின்னர் தாம்பெற்ற சிவஞானபோத உபதேசத்தை, தம் சிஷ்யர்கள் பல்லோரில் சிறந்த ஸ்ரீ சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். சனற்குமார முனிவர் ஸ்ரீசத்தியஞானி தரிசனிகளுக்கு உபதேசித்தார். இவர் தம் மாணவராகிய ஸ்ரீ பரஞ்சோதி முனிவருக்கு உபதேசித்தார்.

ஸ்ரீ பரஞ்சோதிமுனிவர் மாதவம் செய்த தென்திசையாகிய தமிழ்நாட்டினில் சாமுசித்தராய் அவதரித்த திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்ட தேசிகர்பால் சிவஞானபோதத்தை உபதேசித்து, ''இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டுத் தமிழில் சூத்திரம் செய்து பொழிப்புரைக்க'' - என்றருளிட, மெய்கண்டாரும் அவ்வாறு செய்தருளி, தம் ம்மாணவர்கள் பல்லோருள் சிறந்த ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாருக்கு உபதேசிக்க, அவர் ஸ்ரீ மறைஞான சம்பந்தருக்கும், அவர் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி

சிவாச்சாரியார்க்கும் உபதேசிக்க, இங்ஙனமாக கயிலையில் இருந்து நந்தியம்பெருமான் வாயிலாக சிவஞானபோதமானது இப் பூவுலகிற்கு ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு வந்தடைந்தது.

இவ்வரலாறானது மெய்கண்டாரது சிவஞானபோதம் பாயிரம், நூல் மரபில்,

''எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்,
நந்தி உரைத்து அருளும் ஞானநூல் - சிந்தை செய்து,
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம் உணர,
ஏதுதிட்டாந்தத்தால் இன்று''.

என்ற பாடலால் உணரமுடியும்.

(உ) ஸ்ரீ மாணிக்கவாசகரும் சிவஞானபோதமும்.

சைவசமய நால்வர் பெருமக்களில் ஒருவராகத் திகழ்பவர் ஸ்ரீ மாணிக்கவாசகர். ஞானத்தின் சொரூபமாக போற்றி வழிபடப் படுபவர். திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரின் வரலாற்றை கூறும் நூல்களில் ஒன்று கடவுள் மாமுனிவர் பாடிய திருவாத வூரடிகள் புராணமாகும்.

இப்புராணத்தில் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு உபதேசம் செய்திட குருவடிவமாக ஞானாசிரியனாக எழுந்தருளிய சிவபெருமான் திருக்கையில் இருந்தது சிவஞானபோதமாகும் என்று இப்புராணம் கூறுகின்றது.

ஞானாசிரியனாக வந்தபொழுது அவருடைய கரத்தில் நூல் ஒன்று இருந்தது. அது 'என்ன நூல்' என திருவாதவூரர் வினவ,

''இது பொய்மை இல்லா சிவஞானபோதம்'' என்று குருவடிவ மாக வந்த சிவபிரான்அருளிச்செய்கிறான். இதனை திருவாதவூரர் புராணம்,

''உருத்திர நல் திருமணியை யிலங்கு காதி,
லொண் சிரத்திற் கந்தரத்தில் ஒளிகொண் மார்பில்,
கரத்திலணிந் திலகுதிரு முண்ட மங்கி,
கண்கரந்த நன்னுதன்மேற் கவினச் சாத்தி,

திருத்திகழும் வேதியனராம் பொன்மேனி,
திகழ்வது கண்டக மகிழ்வார் செங்கை மீது,
பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப்
பொய்ம்மையிலாச் சிவஞானபோத மென்றார்.''

என்று பாடுகின்றது. அப்பொழுது வாதவூரர், வந்த ஆச்சார்யரை நோக்கி, சிவஞானபோதம் என்பதில் உள்ள, சிவம் ஏது? ஞானம் ஏது? இங்கு இலங்கியிடும் போதம் ஏது? என்று விளக்குவீர் என்று கூற,கல்லால மரத்தின் கீழ் ஞானகுருவாக வீற்றிருக்கும் பரமன் குருவடிவில் இருந்து பதில் அளிக்கின்றார்.

இங்கு சிவமாவது - நிலைபெற்ற ஒப்பற்ற முழுமுதற் பொருள்.

ஞானமாவது - அச் சிவத்தை வழிபட்டு அதனியல்பினை ஐயம் நீங்கி உள்ளவாறு உணர்தல் ஞானமாகும்.

போதமாவது - அவ்வாறு அறிந்ததனை அநுபூதிநிலையில் வைத்துத் தெளிந்துணர்தலே போதம் எனப்படும். என உள்ளம் உருகும்படி பரமன் எடுத்துரைக்கின்றார்.

சுருங்கக்கூறின், நின்ற சிவம் ஒன்று, அதனை உணர்தல் ஞானம், உணர்ந்த பொருளை தெளிதல் திகழ் போதம் ஆகும். இதனை திருவாதவூரர் புராணம்,

''என்றலுமே சிவமேது ஞானமேதிங்,
கிலங்கியிடும் போதமே தியம்பு வீரேல்,
அன்று வடநிழலில் வந்திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன
நின்ற சிவமொன்றதனைத் தேர்தன் ஞான
திகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாமென்று
ஒன்றியநற் பொருள் வினவி நிற்பார் சிந்தை
உருகும் வகை யுரைசெய்தாருவமை யில்லார்.

அந்நிலையிலேயே வாதவூரர் எளியேனைக் ஆட்கொள்ள வேண்டி சிவபரம்பொருள் ஆச்சார்ய திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ளார் என்பதை உணர்ந்து, அவரை கண்ணீர்மல்க அன்புருகி சரணாகதியடைந்தார்.

ஸ்ரீ மாணிக்கவாசகர் ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் காலத்துக்கு முன்பானவர் என்பதால், குருவடிவமாக எழுந்தருளிய சிவபிரான் கரத்தில் இருந்தது ரௌரவ ஆகம சிவஞானபோதமே ஆகும் என்ற கருத்தும் இருந்துள்ளது.

(3) ஸ்ரீமெய்கண்ட தேசிகர் அருள் வரலாறு

''பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இருதய கமல முகைகளெல்லாம்
கண் திறப்பக் காசினிமேல் வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்''

மாதவஞ்செய் தென்திசையாம் தமிழகத்தில் நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் என்ற பாடல் பெற்ற சிவஸ்தலத்தில், பரம்பரைச் சைவவேளாளர் மரபில், சிவபக்தியில் சிறந்து விளங்கும் அச்சுதகளப்பாளர் என்னும் ஒருவர் இருந்தார். அவருக்கு எல்லாச் செல்வமும் இருந்து மக்கட்செல்வம் மட்டும் இல்லாது இருந்தது.

அதனால் வருத்தமுற்ற அச்சுதகளப்பாளர் குழந்தை பேறுக்கான உரிய தெய்வ வழிபாடுகளை கேட்டுணர திருத்துறையூர் சென்று தமது குலகுருவாகிய ஆதிசைவரும் சகலாகம பண்டிதருமாகிய ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாரை வணங்கி நமஸ்கரித்து தம் மனக்குறையை குலகுருவிடம் தெரிவித்தார்.

அதனை செவிமடுத்த குலகுருவானவர், தமது சிவபூஜையை பூர்த்தி செய்து, சிவபெருமான் திருக்கழலைச் சிந்தித்து, அச்சுத களப்பாளர் மனக்குறையை போக்க, தேவாரத் திருமுறையை பூஜித்து, திருமுறையில் கயிறு சாத்துவித்தார். அப்பொழுது,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. 2

என்ற ஸ்ரீ திருஞானசம்பந்தர் பாடியருளிய திருவெண்காடு திருப்பதிகம் உதயமாயிற்று. இத்திருப்பாடலில்-''பிள்ளையினோடு உள்ள நினை ஆயினவே வரம்பெறுவர் ஒன்றும் ஐயுறவேண்டா'' என்பதன் பொருளைச் சகலாகம பண்டிதர் நோக்கி, இத்தேவாரம் அச்சுதகளப்பாளரது மனக்குறை பற்றிய தீர்வினை தெளிவாக அறிவிப்பதனைக் கண்டு மனம்மகிழ்ந்து அச்சுதகளப்பாளர்க்கு உரைத்தருளினார்.

''திருவெண்காடு திருத்தலம் சென்று அங்குள்ள முக்குள நீரில் மூழ்கி நாள்தோறும் திருவெண்காட்டுப் பெருமானை வணங்கி னால், உமக்கு மகப்பேறு கிட்டும்'' என்று கூறினார்.

தமது குலகுரு கூறியபடியே அச்சுதகளப்பாளர் தம் மனைவியாருடன் திருவெண்காடு அடைந்து, சூரிய சோம அக்னி என்னும் முச்சுடர்களின் திருநாமம் பெற்ற முக்குளத்திலே விதிப்படி தீர்த்தமாடி ஸ்வேதாரண்யேஸ்வரரை தினமும் நியமமோடு வழிபட்டு வந்தார்.

அங்கனம் வழிபடும் காலத்தே, ஒருநாள் பெருமான் அச்சுதகளப்பாளர் கனவில் தோன்றி, ''உனக்கு இப்பிறவியிலே, பிள்ளைப்பேறு அடையும் பலன் இல்லை. ஆயினும் ஞான சம்பந்தனது வாக்கினை பரமப் பிரமாணமாகக்கொண்டு நீ ஒழுகுகின்றமையால், அவ்வாக்கு பொய்யாதவாறு அவனைப்போல் ஒரு சத்புத்திரனை (மகனை) உனக்கு தருகின்றோம் என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். உடனே விழித்தெழுந்த அச்சுத களப்பாளர் பெருமகிழ்ச்சிகொண்டு மனைவியாரிடம் தெரிவிக்க இறைவனது பெருங்கருணையை நினைந்து கண்ணீர் மல்க திருவெண்காட்டு இறைவனை கைகூப்பித் தொழுதார்.

இங்ஙனமாக நாள்கள் செல்ல, ஸ்வேதாரண்ய பெருமான் கனவில் கூறிய திருவாக்கின்படியே உலகமெல்லாம் உய்யும்படி அவர் மனைவியாரது அருமைத் திருவயிறு வாய்க்கும் பெரும்பேறு உளதாயிற்று.

அச்சுத களப்பாளர் மிகவும் மகிழ்ந்து, திருவருளைத் துதித்து, சிவாகம விதிப்படி செய்யவேண்டிய சடங்குகளைத் எல்லாம் செய்து, பத்து திங்களில் ஒரு சுபதினத்திலே பரசமயத் தருக்கு நீங்கவும், எல்லோரும் அத்துவிதததுண்மை உணரவும், சைவசமயம் தழைத்தோங்கவும் மாதரசியார் ஓர் ஆண்மகனை சத்புத்திரனை பெற்றெடுத்தார்.

குழந்தையானது திருவெண்காட்டு இறைவனான் அருளால் அவதரித்தமையால் 'சுவேதவனப்பெருமான்' என்றே நாமகரணம் சூட்டினார்கள். அதன் பின் அச்சுதகளப்பாளரும் அவரது மனைவி யும் திருவெண்காட்டுப் பரமனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தமது அருமைத் திருக்குமரனோடு தங்கள் ஜனன பூமியாகிய திருப்பெண்ணாகடம் வந்தடைந்தார்கள்.

சுவேதவன குழந்தையானது நாளும் ஒருமேனியும் பொழு தொரு வண்ணமாக சீருஞ் சிறப்புமாக வளர்ந்துவரும் நாளில், திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த தாய்மாமனார் தம் இல்லத்திற்கு அழைத்து சென்று வளர்த்துவர விரும்பி குழந்தையை தம்இல்லம் எடுத்துச் சென்று பேரன்போடு வளர்த்து வந்தார்.

இவ்வாறு இருக்கையில், ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் திருக் கைலையில் இருந்து வான்வழியே செல்கையில், திருவெண்ணெய் நல்லூரில் சுவேதவனகுழந்தை வீதியிலே மணிதேர் கொண்டு விளையாடியபடி இருக்க, குழந்தை சாமுசித்தராய் அவதரித்தவர் என்பதால், பரஞ்சோதியாரின் வான்வழிப் பயணம் குழந்தைக்கு நேர தடைபட, நிலவுலகம் வந்து குழந்தையைக் காண, சுவேதவனக் குழந்தையின் சிவஞான நிலையை கண்டு, தாம் நந்திதேவர் வழியாகப் பெற்ற சிவஞான உபதேசத்தை குழந்தைக்கு உபதேசித்து, இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டு ''தமிழிலே சிவஞானபோதம் பாடுக'' என அருளி, பின் தமது குரு சத்தியஞானதரிசனிகள் திருநாமத்திற்கு இணங்க, ''ஸ்ரீ மெய் கண்டார்'' என்ற தீக்ஷாநாமமும் சூட்டினார்.

பின்பு ஸ்ரீ மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் சந்நிதியில் சிந்தித்து தெளிந்து நிட்டைக்கூடி சிவஞானபோத சூத்திரத்தை அருளி, வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் செய்து ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் சிவஞான உபதேசம் செய்து வந்தார்.

இந்நிலையில் தம்முடைய நாற்பத்திதொன்பது மாணாக்கருள் சிறந்தவரும், திருத்துறையூர் அவதரித்தவருமாகிய ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரியாருக்கு சிவஞானபோதத்தை உபதேசம் செய்தருளி, சிவயோகத்திலேயே வீற்றிருந்து திருவெண்ணெய் நல்லூர் திருத்தலத்திலேயே ஐப்பசி மாதம் சுவாதி நக்ஷத்திரத்திலே, அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்த பிழம்பாகிய சிவபெருமானோடு இரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியை அடைந்தார்.

ஸ்ரீ மெய்கண்டாரது காலம் பொதுஆண்டு 13-ஆம் நூற்றாண்டாகும்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் பற்றிய கல்வெட்டு தகவல்.

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் மெய்கண்டார் பற்றிய கல்வெட்டு செய்தி உள்ளது.

இராஜராஜசோழனின் 16 ம் ஆண்டு (1232) கல்வெட்டாகும்.

திருவண்ணாமலையை சார்ந்த மாத்தூர் என்று வழங்குகின்ற இராஜராஜநல்லூரில் கோவில் நிர்வாகி ஒருவர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் திருப்பெயரில் மெய்கண்டதேவப் புத்தேரி என்ற ஏரி ஒன்றை வெட்டு வித்தும், மெய்கண்ட தேவேச்சரம் என்ற சிவன்கோயில் அமைத்து அதில் நாள் வழிபாட்டிற்காக ஐந்துவேலி நிலத்தை தேவதான இறையிலியாக வழங்கினார் என்றும் இக்கல்வெட்டு கூறுகிறது.

இக்கல்வெட்டு மெய்கண்டாரைப் பற்றியதே என்றும், இவரது காலம் 13 ம் நூற்றாண்டு என்றும் மு. அருணாச்சலம் அவர்கள் தமது தமிழ் இலக்கிய வரலாறு நூலில் தெரிவிக்கின்றார்.

(4) வடமொழி சிவஞானபோதமும் சிவாக்கிரமாபாஷ்யமும்.

திருக்கைலையில் ஸ்ரீ கண்டசிவம், நந்தியம்பெருமானுக்கு உபதேசித்த ரௌரவ ஆகமம் பாசவிமோசனப் படலத்தின் உள்ள சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களுக்கும் சூரியனார் கோயில் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ வீழிச்சிவாக்கிர யோகிகள் வட

மொழிலேயே பேருரை (பாஷ்யம்) செய்துள்ளார்கள். அதற்கு **''சிவாக்கிரமாபாஷ்யம்''** என்று பெயர்.

சூரியனார்கோயில் ஆதீனம் என்பது ஸ்கந்த பரம்பரை, வாமதேவ சந்தான மரபில் தோன்றிய ஆதீனமாகும். இந்த வாமதேவ முனிவர் வழியில் வருவதால் வாமதேவ சந்தானம் என்று அழைக்கப்படும். மற்ற சைவ ஆதீனங்கள் நந்தி பரம்பரை என்றால், இவ்வாதீனம் ஸ்கந்த பரம்பரை ஆகும்.

அதாவது திருக்கைலையில் ஸ்ரீகண்டபரமசிவம், ஸ்ரீகந்தப் பெருமானுக்கு ஆகமங்களை உபதேசம் செய்கின்றார். கந்த பெருமானிடம் ஸ்ரீவாமதேவ முனிவர் ஞானஉபதேசம் பெறு கின்றார். வாமதேவ மகரிஷியிடம், ஸ்ரீநீலகண்ட சிவாச்சாரியார் உபதேசம் பெறுகின்றார். நீலகண்ட சிவாச்சாரியாரிடம் ஸ்ரீவிஸ்வேஸ்வர சிவாச்சாரியார் உபதேசம் பெற்றார். விஸ்வேஸ்வர சிவாச்சாரியரிடம் ஸ்ரீஸதாசிவ சிவாச்சாரியார் உபதேசம் பெற்றார். ஸதாசிவ சிவாச்சாரியாரிடம் ஸ்ரீ சிவமார்க்கப் பிரகாச சிவாச்சாரியார் உபதேசம் பெற்றார். சிவமார்க்கப்பிரகாச சிவாச்சாரியாரிடம் ஸ்ரீசிவாக்கிர யோகிகள் உபதேசம் பெற்றார்.

இவர்களே சூரியனார்கோயில் ஆதீனத்தை தோற்றுவித்தவர். இவர்களை ஆதிசிவாக்கிரயோகிகள் என்பார்கள். அக்கிரம் என்றால் கொழுந்து. சிவாக்கிரம் என்றால் சிவக்கொழுந்து என்பதாகும். இவ்வாறு வழிவழி உபதேசம் பெற்று உபேதச மரபில் வருவதுதான் சூரியனார் கோயில் ஆதீனமாகும். இவ்வாதீனத்தின் ஆத்மார்த்த மூர்த்தி ஸ்ரீ காளத்திநாதர் ஆவர்.

ஆதி சிவாக்கிரயோகிகளிடம், உபதேசம் பெற்று இரண்டாவது ஆதீனமாக பட்டமேற்றவர் ஸ்ரீ வீழிசிவாக்கிரயோகிகள். இவர்கள் தொண்டை மண்டலத்து சிவப்பிராமணர். அதிவருணாச்ரமியாக விளங்கியவர்கள். 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

இவர்கள் திருவீழிமிழலையில் தங்கி தவவாழ்வு மேற் கொள்ள விரும்பினார். அதன்படி திருவீழிமிழலை தெற்கு வீதியில் ஒருமடம் எழுப்பி அங்கு எழுந்தருளி வீற்றிருந்தார். அதனால் இவர்கள் வீழி சிவாக்கிரயோகிகள் என்ற அழைக்கப்பட்டார். இவர்கள் சூரியனார்கோயில், திருவீழிமிழலை எனும் இரு இடங்களிலுமே ஞான உபதேசம் செய்து வந்தார்கள்.

சூரியனார்கோயில் ஆதீனத்தில் வீழிசிவாக்கிர யோகிகள் காலம் ஒரு பொற்காலமாகும். இவர்கள் வடமொழி தமிழ் என இருமொழிகளிலும் புலமைபெற்றவர்கள். வடமொழியில் ஆகம, சைவசித்தாந்த நூல்கள் பலவற்றை எழுதியருளி யுள்ளார்கள். இவர்கள் காலத்தில் பல ஆகம, சித்தாந்த ஞான நூல்கள் வெளிவந்த காலமாகும்.

இவர்கள் வடமொழியில் இயற்றிய நூல்கள் : 1. கிரியா தீபிகை, 2. சைவசந்நியாச பத்ததி, 3. சிவஞானபோத லகுடீகை. (லகுடிகா), 4. சிவஞானபோத சிவாக்கிரம᾿பாஷ்யம், 5.சைவ பரிபாஷை.

தமிழில் இயற்றிய நூல்கள் : 1. சிவநெறிப்பிரகாசம் சிவநெறிப்பிரகாசம் 215 திருவிருத்தங்களைக் கொண்ட ஞானநூலாகும். இந்நூலுக்கு இவருக்குப்பின் மூன்றாவது ஆதீனமாக பட்டமேற்ற, ஸ்ரீ நந்தி சிவாக்கிரயோகிகள் ஒரு உரையெழுதியுள்ளார். மற்றும், சிவஞானசித்தியார் பரபக்கம் / சுபக்கம் என இருபகுதிக்கும் தமிழ் உரை எழுதியுள்ளார்கள். மேலும் ஸர்வஞானோத்தரம், தேவி காலோத்திரம் போன்ற ஆகமங்களுக்கும் தமிழ் உரை எழுதியுள்ளார்கள்.

ஸ்ரீ வீழிசிவாக்கிரயோகிகளே சைவசமயத்தில் முதன்முதலில் சைவபரமாக சித்தாந்த ரீதியாக பாஷ்யம் எழுதியவர்கள். தமிழில் பேருரை என்பதை வடமொழியில் பாஷ்யம் என கூறுவார்கள். ரௌவரஆகம பாசவிமோசனப் படலத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்கள் கொண்ட சிவஞானபோதத்திற்கு வடமொழியில் ஒரு (பேருரை) பாஷ்யம் எழுதியுள்ளதே இவர்களது தனிப்பெருஞ் சிறப்புக்கு காரணமாகும். இதற்கு சிவாக்கிரம᾿பாஷ்யம் என்று பெயர்.

''ரௌரவதந்த்ரார்கதம் சிவஞானபோதாக்ய சாஸ்த்ரகம்'' என தமது பாஷ்யத்தில் கூறுகின்றார். அதாவது ரௌரவ (தந்திரம்) ஆகமத்தில் கூறப்பட்டுள்ள சிவஞானபோதம் என்பதாகும்.

சிவஞானபோத சிவாக்கிரபாஷ்யம் முதல்சூத்திரம் வியாக்யானத்தின் முன்னுரையில் 37 ஆவது பத்தியில்,

''த்[3]வாத[3]ஶ ஸூத்ராத்மகம் ஶாக்தம் ஶரீரம்[2]
பரிக்[3]ரு'ஹ்ய காமிகாத்[3]யஷ்டாவிம்'ஶதி
பே[4]தகபி[4]ந்நாக[3]ம நிர்மிதவத: பரஶிவாத்

அனுக்3ரஹ: பூர்வகம்' அதி4க3த்ய
அனந்தேஶேனஸ்வஸ்மைபோ3தி4தம்'
ரௌரவதந்த்ராந்தர்3கதம்'
ஶிவஜ்ஞானபோ3தா4க்2ம்உபதி3ஶதி -
ஸ்த்ரீபுந்நபும்'ஸகாதி3த்வாத் இதி........''

என்று ரௌரவாகம சிவஞானபோதம் என்று குறிப்பிடுகிறார் வீழிசிவாக்கிர யோகிகள்.

அதாவது, பன்னிரு சூத்திரவியல்பினதாகிய சாத்த சரீரத்தைக் கொண்டு, காமிகம் முதல் இருபத்தெண்வகையினவாய ஆகமங்களை அருளிச்செய்த பரமசிவனிடத்து அனுக்கிரஹம் உண்டாகப் பெற்ற அநந்தேஸ்வராலே தமக்கு உணர்த்தப்பட்ட இரௌரவ ஆகமத்தினுட்பட்ட சிவஞானபோதம் எனப் பெயரிய சாஸ்திரத்தை உபதேசிக்கின்றார்.

ஸ்திரீபுந் நபும்ஸகாதித்வாத் என....... என்றும், அதே சிவாக்கிரபாஷ்யம் முன்னுரையின் 45 ஆவது பத்தியில்,

''உக்தஸ்ய ஸர்வஸ்யாப்யர்த2ஸ்ய ஸூசக
உபஸம்'ஹாரக3தம்' ஶைவார்த2 நிர்ணயம்' இதி
விஶேஷணம் அனேன ச விஶேஷேண
அஸ்யஶிவஜ்ஞானபோ3த4ஸ்ய ஶைவார்த2 தத்வம்'
விஷயம்' இத்யுக்தம்' ப4வதி''

அதாவது, முடிவினெய்திய சைவார்த்த நிர்ணயம் என்னும் விசேஷணம் சொல்லப்பட்ட எல்லா அர்த்தங்களையும் குறிப் பிப்பது. இவ்விசேஷணத்தினாலே இச்சிவஞான போதத்திற்குச் சைவப்பொருளின் உண்மையே விஷயம் என்பது சொல்லப்பட்டதா கின்றது. என சிவஞானபோதம் பன்னிரெண்டாவது சூத்திரத்தில் வரும் சைவார்த்த நிர்ணயம் என்பதற்கு விளக்கம் கூறுகிறார். இவ்வாறு வடமொழி சித்தாந்தத் தத்துவங்களை முழுமையாக இந்த பாஷ்யத்தில் வீழி சிவாக்கிரயோகிகள் எழுதியுள்ளார்கள்.

பிற்காலத்தில் மாதவ சிவஞான சுவாமிகள் தமிழில் சிவஞானபோத மாபாடியம் எழுதுவதற்கு தூண்டுகோலாக இருந்தது வீழி சிவாக்கிர யோகிகள் செய்த வடமொழி சிவானபோதபாஷ்யமே காரணம் ஆக விளங்கியது என்கிறார் சைவ

ஆதீனங்கள் என்ற நூலில் ஊரன் அடிகள் அவர்கள் ''சிவஞான சுவாமிகள் உரை சிவாக்கிரயோகியாரது வடமொழி உரையை ஒருபுடைத் தழுவியது'' என்கிறார் திரு.வி.க. அவர்கள். இவ்வாறு சைவ சமயத்திற்கு பல அருந்தொண்டுகளை ஆற்றியவர் ஸ்ரீலஸ்ரீ வீழி சிவாக்கிரயோகிகள் ஆவர்.

(இவ்வாதீனத்தின் சிவாக்கிரயோகிகளுக்கு முன்பு இருந்த ஸ்ரீ ஸதாசிவ சிவாச்சாரியார் சிவஞானபோதத்தின் வடமொழி சூத்திரங்களுக்கு முதலில் உரை கண்டவர்கள் என்ற குறிப்பும் காணப்படுகின்றது)

(5) சிவஞான போதமாபாடியம் அருளிச்செய்த ஸ்ரீ மாதவ சிவஞானசுவாமிகள் அருள் வரலாறு

''கருணைபொழி திருமுகத்தில் திருநீற்று நுதலும்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு துறவோடு பொறையுளத்திற் பொறுத்தே
பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத மனமும்
மருவினர்கள் அகலாத ஞானமே வடிவாம் வளர்துறைசைச்
சிவஞான மாமுனிவன் மலர்த்தாள்
ஒருபொழுதும் நீங்காமல் எமதுளத்தில் சிரத்தில்
ஓதிடுநா வினிலென்றும் உன்னிவைத்தே உரைப்பாம்!''

- தொட்டிக்கலை ஸ்ரீமத் மதுரகவி சுப்பிரமணிய முனிவர்.

ஸ்ரீ மாதவ சிவஞான ஸ்வாமிகள் திருநெல்வேலி மாவட்டம் விக்ரமசிங்கபுரம் என்னும் திருத்தலத்தில், 1753-ஆம் ஆண்டு சைவ வேளாளர் மரபில் ஆனந்தக்கூத்தர் - மயிலம்மை தம்பதிகளுக்கு சத்புத்திரனாக தோன்றி அருளினார்கள். குழந்தைக்கு பெற்றோர்கள் 'முக்களாலிங்கர்' என்று பிள்ளைத் திருநாமம் சூட்டினர். சிறுவயதிலேயே நிறைந்த ஞானமும் கல்வியறிவும், சைவ ஒழுக்கமும் பெற்று விளங்குனார்.

இவ்வாறான நாளில், தலயாத்திரை செய்துகொண்டு விக்கிரமசிங்கபுரத்திற்கு வந்த திருவாவடுதுறை ஆதீன முனிவர்கள் சிலரை தரிசித்து அவர்களைத் தம்இல்லம் அழைத்துச் சென்று அமுது செய்வித்தார்கள்.

முன்னைத் தவப்பயனால் அம்முனிவர்களின் திருத்தோற்றத்திலும், சிவஞான நிலையாலும் ஈர்க்கப்பெற்ற முக்களாலிங்கர் அவர்களுடன் அவர்களுடனே திருவாவடுதுறை சென்று சிவஞான உபதேசம்பெற விரும்பி, தம் பெற்றோரிடம் அனுமதிபெற்று அம் முனிவர்களுடன் கிளம்பி தலங்கள் பலவற்றையும் தரிசனம் செய்துகொண்டு சுசீந்திரம் வந்து சேர்ந்தார்.

அக்காலத்தில் அங்குள்ள திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடத்தில் சின்னப்பட்டமாக வீற்றிருந்த பேரூர் வேலப்ப தேசிகரை தரிசித்து ஞானதேசிகரிடமே சைவசந்நியாசமும் சிவதீக்ஷையும் பெற்று 'சிவஞானஸ்வாமிகள்' என்ற தீக்ஷா நாமம் பெற்றார்கள். குருமுகமாக மெய்கண்ட நூல்களையும் ஆகம சித்தாந்த தத்துவங்களையும் அநுபூதிப் பொருளுடன் அறிந்து உணர்ந்து தெளிந்து சிவானுபூதி செல்வரானார்.

பின்பு பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு திருவாவடு துறைக்கு எழுந்தருளி, ஆதீனத்தில் அப்பொழுது பத்தாவது குரு பீடத்தில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ வேலப்பதேசிக மூர்த்திகளை தரிசித்து குருலிங்க சங்கமத் தொண்டு செய்து வந்தார்கள்.

பின்னர் காஞ்சிபுரம் சென்று ஆதீனத்தின் கிளைமடத்தில் பலகாலம் தங்கியிருந்து காஞ்சிப்புராணம் உள்ளிட்ட பல இலக்கண நூல்களும் சாத்திர நூல்களும் எழுதியருளிச் செய்தார்கள்.

சிவஞானமாபாடியம் காஞ்சியில் இருந்தபொழுது எழுதியது என்ற கூற்றும் உண்டு.

ஸ்ரீ சிவஞான ஸ்வாமிகள் இயற்றிய நூல்களில் மணிமகுடமாக விளங்குவது, ஸ்ரீ மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதத் திற்கு மாபாடியம் என்னும் பேருரையை எழுதியதே ஆகும்.

''உள்ளது போகாது இல்லது வராது'' - என்பது சத்காரிய வாதம் எனப்படும். சைவசித்தாந்தம் சத்காரியவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த சத்காரிய வாதத்தின் வழிநின்று சுவாமிகள் மாபாடியம் அருளியுள்ளார்.

சித்தாந்த சைவசமயத்தில் சிவஞானபோதம் முதன்மையான ஆகம சித்தாந்த நூலாகும். இந்நூலுக்கு பேருரை செய்தது சைவ

சமயத்தவருக்கு மிகப்பெரும் அருட்கொடை வரப்பிரசதமாகும். இதன் காரணமாகவே ஸ்வாமிகள் 'மாபாடியக்காரர்' என்று சிறப்பு அடைமொழியில் அழைத்து போற்றப்பட்டார்.

மேலும் சிவஞானபோதத்திற்கு சிற்றுரையும் எழுதியதோடு சிவஞான சித்தியாருக்கு பொழிப்புரையும் செய்தருளினார்கள்.

இவையன்றி பல பிரபந்த நூல்கள் இலக்கண இலக்கிய நூல்கள், தருக்க நூல்கள் சாத்திர நூல்கள் என நூல்களைத் தந்துள்ளார்கள். அவை வருமாறு :

(அ) இலக்கியம்

1. இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி
2. கச்சி ஆநந்த ருத்திரேசர் பதிகம்
3. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தி
4. கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்
5. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி
6. காஞ்சிப்புராண முதற்காண்டம்
7. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
8. குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
9. செப்பறைப்பதி இராசை அகிலாண்டேசுவரி பதிகம்
10. சோமேசர் முதுமொழி வெண்பா
11. திருத்தொண்டர் திருநாமக் கோவை
12. திருமுல்லைவாயிலந்தாதி
13. திருவேகம்பரந்தாதி
14. திருவேகம்பராநந்தக் களிப்பு
15. பஞ்சாக்கரதேசிகர் மாலை

(ஆ) இலக்கணம்.

16. இலக்கண விளக்கச் சூறாவளி
17. சங்கர நமச்சிவாயர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்
18. தொல்காப்பியர் சூத்திர விருத்தி

(இ) தருக்கம்.

19. தருக்க சங்கிரகமும் அன்னம்பட்டீயமும்

(ஈ) சமய நூல்கள்

20. அரதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு
21. எடுத்தென்னும் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்
22. 'என்னை யிப்பவத்தில்' என்னுஞ் செய்யுட் சிவசமவாத உரை மறுப்பு
23. சித்தாந்தப் பிரகாசிகை
24. சித்தாந்த மரபு கண்டன கண்டனம்
25. சிவசமவாத வுரை மறுப்பு
26. சிவஞானசித்திப் பொழிப்புரை
27. சிவஞான பாடியம்
28. சிவஞான போதச் சிற்றுரை
29. சிவ தத்துவ விவேகம்.

சமயங்களை பொதுவாக புறச்சமயம் / அகச்சமயம் என்று இரண்டாகப் பகுத்து கூறும் வழக்கமே இருந்தது. ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகளே நால்வகையாக வகுத்து, புறப்புற சமயம், புறச்சமயம், அகப்புற சமயம், அகச்சமயம் என பகுத்தார். இப்பகுப்பே இவர்காலத்திற்குப் பின்னர் நின்று நிலவியது.

சிவஞான ஸ்வாமிகளின் சிஷ்யர்களாக கவிராக்ஷஸ கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் முதலிய பன்னிரு சீடர்கள் திகழ்ந்தனர்.

இவ்வாறு ஸ்ரீ மாதவ சிவஞானஸ்வாமிகள் வடமொழி தென்மொழி என இருமொழிகளிலும் புலமைபெற்று சைவ சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் பல.

இவரது செயற்கரிய தொண்டின் காரணமாக சிவஞான ஸ்வாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தின் குலதெய்வமாக போற்றப்படுகின்றார். இவ்வாறு சிவஞானத் தொண்டுகளை ஆற்றிய சுவாமிகள் விசுவாசு ஆண்டு சித்திரை மாதம்

எட்டாம்நாள் ஆயில்ய நட்சத்திர திருநாளில் (17-4-1785) சிவானந்தப் பெருவாழ்வு பெற்றார்கள்.

ஸ்ரீமத் மாதவ சிவஞான ஸ்வாமிகளின் ஞானசமாதி திருக்கோயிலானது திருவாவடுதுறை தபோவனத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீமத் மாதவசிவஞான முனிவர் மலரடி சரணம்.

(6) இலக்கணம் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் ஸ்வாமிகளும் சிவஞானபோதமும்.

இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளே ஸ்ரீமத் மாதவ சிவஞானசுவாமிகளின் சிவஞான போத மாபாடியத்தை 1921 -ஆம் ஆண்டு ஓலைச்சுவடியில் இருந்து படியெடுத்து வெளியிட்டு பெரும் தொண்டாற்றியவர்கள்.

இவர் இலங்கை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்தவர். தந்தை வெற்றிவேற் பிள்ளை. மிக இளம் வயதிலேயே பாரதநாட்டுக்கு யாத்திரையாக வந்தவர். துறவறத்தில் பற்றுக் கொண்டு இங்கேயே தங்கி துறவியானார். தமது சிறுவயதிலேயே சிதம்பரம் முதலிய பல தலங்களை தரிசித்து, தில்லை சிதம்பரம் ஈசானமடம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளிடம் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாஸ்திர பாடங்களையும் பயின்றார். இலக்கண இலக்கியங் களிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலும் பெரும் புலமையுடன் விளங்கினார்.

பின்பு சூரியனார்கோயில் ஆதீனம் அடைந்து அங்கு அப்பொழுது மடாதிபதியாக வீற்றிருந்த, பதின்மூன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளிடம் சிவதீக்ஷையும், காஷாயமும் துறவும் பெற்றார். அவர்களிடமே ஞானநூல்களை ஓதி உணர்ந்தார்.

சிவனடியார்களுக்குரிய இலக்கணங்கள் எல்லாம் சிறந்து விளங்கியமையால் இவருக்கு இலக்கணச்சாமி என்ற காரணப் பெயர் உண்டாயிற்று.

இவர்கள் சைவசமயத்திற்கு பல உன்னத பணிகளை ஆற்றியுள்ளார்கள். அதில் தலையாய பணியாக போற்றத்தக்கது ஓலைச்சுவடிகளில் இருந்த சிவஞானபோத மாபாடியத்தை கொண்டுவந்து வெளியிட்டதே ஆகும். இது ஒரு தவரீதியான சுவாரஸ்ய வரலாறாகும்.

இவர்கள் சூரியனார்கோயில் ஆதீன நூல்களாகியவீழி சிவாக்கிரயோகிகள் செய்த கிரியாதீபிகை, சைவசந்யாச பத்ததி போன்ற நூல்களை ஆராய்ச்சி செய்யும் காலத்தில், ஸ்ரீமாதவ சிவஞான சுவாமிகள் தம்கைப்படயெழுதிய மாபாடிய ஏடுகளை தம்குருமூர்த்திகள் தந்து, ''இதனை ஒடுக்கத்தில் இருந்தே படியெடுப்பாயாக'' என்று கூற, இலக்கணம் சாமிகள் ஓராண்டு காலம் இரவுபகலாக. நெருக்கடியான நிலையில் சிறு தீபஒளியில் ஒடுக்கத்தின் ஒருபகுதியில் தவமியற்றி மாபாடியத்தை படி யெடுத்தார்.

இச்செய்தியை இவர்கள் பதிப்பித்த கிரியாதீபிகை முன்னுரை யில் இவ்வாறு அவரே கூறுகின்றார்.

''எங்கள் துவிதீய குருமூர்த்திகள் அருளிச் செய்த சிவாக்கிரம பத்ததி எனும் கிரியாதீபிகை, மற்றும் சைவசந்நியாச பத்ததி நூல்களை ஆராய்ந்து ஏட்டுச்சுவடியாக இருந்தவைகளை படியெடுத்து எழுதிய நிலையில், ஆராயும்பொழுது பல ஸ்லோகங்கள் சோமசம்பு பத்ததியில் உள்ளனவாகத் தெரிந்து அப்பத்ததியை தேடி எழுதிக் கொண்டு மீண்டும் இதனை ஆராயப்புகும்பொழுது, ஸ்ரீ சிவாக்கிரம பத்ததி அச்சிடும்பொருட்டு எங்கள் சற்குருநாத சுவாமிகளது திருமுன்பே வடமொழி வல்லுனர்களோடு பல தேசத்து பிரதிகளையும் ஒப்புநோக்கும் பணியிலே சிறிதுகாலஞ் சென்றது.

அதன்பின் எங்கள் குருசுவாமிகள் அடியேன்மீது பேரருள் சுரந்து திராவிட மாபாடியத்தை அளித்தருளி, இதனை தனியே யிருந்து விரைவாக எழுதி முடிப்பாயாக, எனப் பணித்தருளலும், அப்பேரருட்பணியைச் சென்னிமேற் கொண்டு பிற பணியெல்லாம் மறந்து ஒடுக்கத்திலேயே இருந்து அதனை எழுதி முடிப்பதற்கு ஓராண்டு சென்றது. ஆயுந்தொறுந் தொறும் இன்பந்தரும்

அத்தமிழ்ப்பெரும் பாடியத்தையன்றிப் பிறிதொன்றையும் உள்ளம் நாடாமையால் இந்நூலாராய்ச்சி நடைபெறுவதாயிற்று''

இவ்வாறு மற்ற அனைத்துப் பணிகளையும் ஒதுக்கி குருநாதரின் ஒடுக்கம் எனும் அறையில் இருந்தபடியே சிவஞான போத பாடியத்தை எழுதி முடிப்பதற்கு ஓர்ஆண்டு ஆகியுள்ளது.

இவ்வாறு, இலக்கணம் சுவாமிகள் அரிதின் முயன்று எழுதிய காகிதப்படியே, முதல்முதல் வெளிவந்த மாபாடியத்திற்க்கு மூலமாக இருந்தது. இங்கே ஒன்றை நினைத்துபார்க்கவேண்டும்.

சந்நிதானம் முன்பு ஒடுக்கத்திலேயே எப்பொழுதும் மரியாதையாக, பணிவாக, சிறு சிறு ஓலைச்சுவடிகளை, அதுவும் மாபாடியத்தை சிறு வெளிச்சத்தில் ஞானநிலையில் அமர்ந்து ஏடுகளில் பதிவுசெய்வது என்பது மிக கடினமான கார்யமாகும். இவ்வாறு இரவு பகலாக ஒருவருடம் படிஎடுப்பது சாதாரண விஷயமல்ல. நம் விருப்பம் போல் வேறெங்கும் வசதிக்கேற்ப எடுத்துச் சென்று எழுதிக்கொள்ள முடியாத நிலை.

இத்தகைய அரும்பெரும் தொண்டை இலக்கணம் சாமிகள் செய்தார். காரணம் சைவசமயத்தின் மீதும் சைவநூல்களின் மீது கொண்ட பற்றேஆகும்.

பெரியபுராணத்திற்கு சிறந்ததோர் உரை எழுதிய கோவை ''சிவக்கவிமணி'' சி. கே. சுப்பிரமணியமுதலியார் எழுதிய பெரிய புராண உரைகளை இலக்கணம் ஸ்வாமிகள் பார்வையிட்டுப் பரிசோதித்த பின்னரே வெளியிட்டு வருவாராம்.

1948-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்த பழனி - ஈசான சிவாச்சாரியார் ஸ்வாமிகள், இலக்கணம் சுவாமிகளைப் பற்றி கூறும்பொழுது, 'இப்பொழுது சைவசித்தாந்த ஞானத்திற்கு எல்லையாக விளங்குபவர் இலக்கணம் சுவாமிகளே ஆவர். இவர்கள் பின் இவர்களிடத்தை நிரப்ப ஒருவரும் இல்லை' என்று கூறினார் எனில் இவர்தம் பெருமையையும் ஞானத்தையும் உணர்ந்துகொள்ளலாம். இவர்களால் சூரியனார்கோயில் ஆதீன புகழ் எங்கும் பரவியது.

தில்லை சிதம்பரமே இவர்களுக்கு பிடித்த ஆத்மார்த்தமான இடமாக விளங்கியது. தில்லையில் உள்ள காரைக்குடி சொக்கலிங்கம் செட்டியாரால் அமைக்கப்பெற்ற மெய்கண்ட சித்தாந்த வித்யாசாலையில் தங்கியே அரிதின் அரிதான பல

கிடைத்தற்கரிய சைவசமய நூல்களை சேர்த்தும் பதிப்பித்தும் பாடம் எடுத்தும் வந்தார்கள். தம்மிடம் இருந்த பொருளையும் நூல் ஆராய்ச்சிக்கும் நூல் பதிப்புக்குமாகவே செலவிட்டார்கள்.

இவர்கள் தில்லையில் தங்கிருந்து தருமை ஆதீன வெள்ளியம்பலத் தம்பிரான் ஸ்வாமிகளின் ஞானாவரண விளக்கம் நூலை அச்சிடுவதற்காக ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு இருந்த காலத்தில் 1949-ஆம் ஆண்டு தமது 70-ஆவது அகவையில் சிதம்பரத்தில் சிவமுக்தி பெற்றார்கள். இவருடைய ஞானசமாதி சிதம்பரம் - ஞானபிரகாச தீர்த்தக் குளக்கரை அருகில் உள்ளது.

சைவசமய நூல்களை இவருடைய ஞானசமாதியில் வைத்து பூஜித்துப் படிக்க ஞானம் கைவரப்பெறுவது உறுதி. இத்தகைய மகான்களின் புகழ் சைவ உலகில் பெருமளவு பரவ வேண்டும்.

(7) சிவஞானபோதத்துக்கு வந்த உரைநூல்கள் - பதிப்பு விபரம்.

சிவஞானபோதம் நூலுக்கு பல உரைநூல்கள் தற்காலத்தில் வந்துள்ளன. ஆனால் பழமையான உரை நூல்கள் பதிப்புகள் சிலவற்றை காண்போம்.

(1) ஸ்ரீ மெய்கண்ட தேசிகர் 13-ஆம் நூற்றாண்டில் அவதரித்து சிவஞானபோதம் என்ற நூலை இயற்றியருளினார். இந்நூலுக்கு மெய்கண்டாரே வார்த்திகம் எனப்படும் பொழிப்புரையும் மேற்கோள் முதலியன அடங்கிய அதிகரணம் என்ற பகுப்பையும் செய்தார். இவர்கள் செய்த வார்த்திகமாகிய பொழிப்புரையே முதல் உரை ஆகும்.

(2) சிவஞான போதத்திற்கு, பதினான்காம் நூற்றாண்டில் பாண்டிப் பெருமாள் எழுதிய உரையே தொன்மையான உரையாகும். பதவுரை விருத்தியுரை என இரண்டும் எழுதியுள்ளார். முதன்முதலில் சிவஞானபோதத்திற்கு வந்த உரை பாண்டிப் பெருமாள் விருத்தியுரை. இவ்வுரையை முதலில் பதிப்பித்தவர் கோ. சண்முகசுந்தர முதலியார்.

பின்பு, பாண்டிப்பெருமாள் விருத்தியும் தெளிபொருள் விளக்கமும் என 1955-ம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டனர்.

(3) திருவாவடுதுறை ஆதீனத்தின் குலதெய்வமாக போற்றப் பெரும் ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகள் அருளிய சிவஞானபோத மாபாடியம் என்னும் பேருரை மற்றும் சிற்றுரை. ஸ்ரீ சிவஞான சுவாமிகளின் உரையே சிவஞானபோதத்துக்கு தலையாயனதாக விளங்குகின்றது. இந்த மாபாடியமே பிற்காலத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாடமாக பயிலப்பட்டு வருகின்றது.

(4) சிவஞானபோதம் உள்ளிட்ட பதினான்கு சாஸ்திர நூல்கள் மூலம் மட்டும்1866-ஆம் ஆண்டு அச்சிட்டவர் மதுரை நாயகம் பிள்ளை அவர்கள். இந்நூல் வெளியீட்டுக்கு உதவியவர் ஆரணி ஜாகீர் - காசி நாராயணசாமி முதலியார் அவர்கள்.

(5) சித்தாந்த சாஸ்திர நூல்களை தனித்தனியாக பழைய உரைகளோடு 1871-ஆம் ஆண்டு கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் அவர்கள் வெளியீடு.

(6) சிவஞானபோதம் ஆங்கில பதிப்பு 1895 ம் ஆண்டு ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது.

(7) சித்தாந்த சாஸ்திர நூல்கள் பதிநான்கையும் உரைகளோடு ஒரே தொகுதியாக 1897-ம் ஆண்டு காஞ்சி நாகலிங்க முதலியார் அவர்கள் வெளியிட்டார்கள். இந்நூல் முதல் பதிப்பிற்கு உதவி செய்தவர் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்கள்.

(8) 1905-ஆம் ஆண்டு வந்த இரண்டாம் பதிப்புக்கு நிதிஉதவி செய்தவர்கள் மதுரை தமிழ்ச் சங்க நிறுவனர் - பாண்டித்துரை தேவர் அவர்கள். சித்தாந்த சாஸ்திரங்களுக்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் என்று முதலில் பெயர் சூட்டியவர் காஞ்சி நாகலிங்க முதலியாரே ஆவர்.

(9) சித்தாந்த சாஸ்திரங்கள் முழுவதையும் பதிப்பித்தவர் ஆனூர் சிங்காரவேல் முதலியார். இவர்களே முதன்முதலில் ஸ்ரீ உமாபதி சிவம் நூல்களை ''சித்தாந்த அஷ்டகம்'' என்ற பெயர் சூட்டி வெளியிட்டவர்கள்.

(10) ''சிவஞான போதச் சிற்றுரை'' - பதிப்பாளர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - மறுபதிப்பு - ஆண்டு - 1905.

(11) யாழ்ப்பாணம் வண்ணைநகர் சுவாமிநாத பண்டிதர் அவர்களால் 1906-ஆம் ஆண்டு பதிப்பித்த சிவஞான

போதமும் சிவஞானபோத மாடியமும் சிற்றுரையும் என்ற நூல் சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையினரால் வெளியிடப்பட்டது.

(12) ''சிவஞானபோதம் மூலமும் சிவஞான பாஷ்யமும்'' நூல் 1906-ஆம் ஆண்டு சுப்பிரமணியப்பிள்ளை அவர்களால் மதுரை விவேகபானு அச்சியந்திரசாலை வழி வெளியிடப் பட்டது. (பராபவ-ஆவணி).

(13) (பராபவ-ஐப்பசி) ''சிவஞானபோதம் மூலமும் - உரையும்'' + J.M. நல்ல சுவாமிப்பிள்ளை இயற்றிய ஆங்கில மொழி பெயர்ப்புடன் இராஜா ஹரிஹர புத்திரபிள்ளை அவர்களால் திருச்சி ஸ்ரீ மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்தின் வழி 1906-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

(14) ''ரௌரவ ஆகம சிவஞானபோத சமஸ்க்ருத மூலமும் தத்துவப் பிரகாசிகை தமிழ் உரையும்'' - ஆசிரியர் - வி.குப்புசாமி மகராஜ், ஆண்டு 1916.

(15) ''சிவஞானபோத வசனாலங்கார தீபம்'' - காசிவாசி செந்தி நாதையர் 1917.

(16) மாதவச் சிவஞான சுவாமிகளின் சிற்றுரையினை அடியொற்றிக் தூத்துக்குடி பொ. மு த்தையாபிள்ளை அவர்களின் ''சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்'' மற்றும் ''சிவஞான சுவாமிகளின் மாபாடியமும்'' பொ.முத்தையா பிள்ளை விளக்கமும்'' என்ற நூல் 1918-ஆம் ஆண்டு வெளிவந்தது.

(17) ''சிவஞானபோத உபந்நியாசபாடம்'' உரை. வி.பி. காந்திமதிநாதபிள்ளை அவர்களால் 1918-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

(18) ''சிவஞான போதமும் வார்த்திகப் பொழிப்புரையும் சிவஞான பாடியமும்'' என்ற நூல் 1921-ம் ஆண்டு மு. பால்வண்ண நாதம்பிள்ளை அவர்களால் சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலை வழி வெளியிடப்பட்டது. (துர்மதி-மார்கழி).

(19) ''சிவஞானபோத மாபாடியம்'' - பதிப்பாளர் - சூரியனார் கோயில் ஆதீனம், ஆண்டு 1921.

(20) ''சிவஞானபோதம் உரையுடன்'' - கா. மு. சுந்தர முதலியார். ஆரணி திருநாவுக்கரசு அச்சுக்கூடம். ஆண்டு 1924.

(21) ''சிவஞானபோதச் சுருக்கம்'' - வாலையானந்த சுவாமிகள். ஆண்டு 1925.

(22) தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் 1925-ஆம் ஆண்டு பதினான்கு சாஸ்திரம் முதலில் .மூலம் மட்டும் வெளியிட்டனர்.

(23) ''சிவஞான போதம்'' - ஸ்ரீமத் சிவாக்ர யோகிகள் அருளிச் செய்த இலகுடிகைக்கு தமிழ்மொழி பெயர்ப்பு - ஆசிரியர் - ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள் - வெளியீடு - பிரம்மஸ்ரீ சுப்பிர மணிய சாஸ்திரிகள், ஆண்டு-1928, கலி-5029 - விபவ.

(24) சிவஞானமாபாடியம் - சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் ஆண்டு - 1936.

(25) ''சிவஞானபோத மூலமும் தெளிபொருள் விளக்க உரையும்'' - கோ. வடிவேலு செட்டியார். ஆண்டு 1928.

(26) ''மெய்கண்டாரும் சிவஞான போதமும்'' - ஆசிரியர் - கா.சு.பிள்ளை - வெளியீடு - சைவ சித்தாந்த சமாஜம், சென்னை. ஆண்டு - 1932.

(27) சைவசித்தாந்த மகாசமாஜம் மா. பாலசுப்பிரமணிய முதலியார் பதினான்கு சாஸ்திரநூல்களையும் பழைய உரைகளோடு மிக அழகாகவும் நேர்த்தியாகவும் 1934-ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள். இந்நூல் உருவாக்கத்தில் துணைநின்றவர் ச. அனவரத விநாயகம் பிள்ளை மற்றும் ,எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகியோர்.

(28) ''சிவஞான மாபாடியம்'' - சைவசித்தாந்த மகாசமாஜம் 1936.

(29) ''சிவஞானபோதம்'' - வ. உ. சி உரை. ஆண்டு 1935.

(30) தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஸ்வாமிகள் காலத்தில், மௌனமடம் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் முயற்சியில் சித்தாந்த சாஸ்திரம் மூலப்பதிப்பு வெளிவந்தது. பின்னர் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களைக் கொண்டு மீள்பதிப்பு வெளியிடப்பட்டது. (1942-ஆம் ஆண்டு).

(31) ''சிவஞான போத மூலம் - பழைய உரையுடனும், வடமொழிச் சிவஞான போதம் தமிழுரையுடனும்'' வெளியீடு-28, திருவாவடுதுறை ஆதீனம் - பதிப்பாசிரியர் - த.ச.மீனாட்சி சுந்தரம்பிள்ளை - ஆண்டு-1949 - விரோதி - ஐப்பசி - சுவாதி.

(32) திருவாவடுதுறை ஆதீனம் 1950-ஆம் ஆண்டு முதல் சிவஞான போதம் சாத்திர நூல்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி உரையோடு வெளியிட்டுள்ளார்கள். ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மையம் உரைகளும் சாஸ்திர நூல்களுக்கு தனித்தனியாக வெளிவந்துள்ளன.

(33) ''சிவஞானபோதம் மூலமும் - சிவஞான சுவாமிகள் சிற்றுரையும்'' பதிப்பாசிரியர் - த.ச.மீனாட்சிசுந்தரம்பிள்ளை - வெளியீடு-77, திருவாவடுதுறை ஆதீனம் - ஆண்டு-1954 - விசய - தை - அசுபதி.

(34) ''சிவஞான போதச் செம்பொருள்'' - உரை - ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை - வெளியீடு - காசித் திருமடம் - திருப்பனந்தாள் - ஆண்டு - 22-03-1958.

(35) ''சிவஞான போத சாரம்'' - இயற்றியது - சித்தாந்த மாணவன் யாழ்ப்பாணம் - விவேகானந்த அச்சகப் பதிப்பு - ஆண்டு - 1957 - ஏவிளம்பி - சித்திரை.

(36) திருப்பனந்தாள் காசித்திருமடம் முனைவர். கு.சுந்தரமூர்த்தி அவர்களைக்கொண்டு பதினான்கு சாஸ்திர நூல்களுக்கும் தனித்தனி உரைகளோடு நூல் வெளியிட்டுள்ளார்கள்.

(37) ''சிவஞானபோதம்'' - இளவழகனார் உரை - 1960.

(38) ''சிவஞானபோத மூலமும் சிவஞானசுவாமிகள் சிற்றுரையும்'' - ஔவை சு. துரைசாமிபிள்ளை. அண்ணாமலை பல்கலைக்கழகம் வெளியீடு 1968..

(39) ''சிவஞானபோதம் உரைநடை'' - த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை. ஆண்டு 1973.

(40) ''சிவஞானபோதத் திறவு'' - க. வச்சிரவேல் முதலியார் உரை. திருவாவடுதுறை ஆதீனம் வெளியீடு. ஆண்டு 1974.

(41) ''சிவஞானபோதம்'' - ப. இராமநாதம் பிள்ளை உரை. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் -1977.

(42) ''சிவஞான பாடியத் திறவு'' ஆசிரியர் - க. வச்சிரவேல், முதலியார் - வெளியீடு - சென்னைப் பல்கலைக் கழகம் - ஆண்டு - 1977.

(43) ''சிவஞானபோதம் தெளிபொருள்'' - ஆசிரியர் - ந.ரா.முருக வேல் - வெளியீடு - தருமைஆதீனம் - ஆண்டு - 1977.

(44) ''சிவஞானபோதமும் - வார்த்திகப் பொழிப்பும்'' - பதிப்பாசிரியர்கள் : க.வச்சிரவேல் முதலியார் - ச.கங்காதரன் - வெளியீடு - மதுரை பல்கலைக்கழகம் - ஆண்டு - 1978.

(45) ''திருமுறைத் தெளிவே சிவஞான போதம்'' - ஆசிரியர் - வை.இரத்தின சபாபதி - வெளியீடு - சென்னைப் பல்கலைக் கழகம் - ஆண்டு - 1979.

(46) ''சிவஞானபோதம்'' - ஜி. வரதராஜம் பிள்ளை உரை. தெய்வத் தமிழ் மன்றம் மாயூரம் - 1970.

(47) திருநெல்வேலி அருள்நந்திசிவம் அருட்பணிமன்றம் வாயிலாக 1987-ஆம் ஆண்டுமுதல் சி. சு. மணி, கு. சுந்தரமூர்த்தி, ஆ. ஆனந்தராசன் ஆகியோர்களைக் கொண்டு பதினான்கு சாஸ்திரங்களுக்கு உரை எழுதி வெளியிடப் பட்டது.

(48) ''சிவஞானபோதத் திருநெறியுரை'' - சி. அருணை வடிவேல் முதலியார். பேரூராதினம் - சத்வித்யா சன்மார்க்க சங்கம்-1992.

(49) ''சிவஞான மாபாடியம்'' - கே. வச்சிரவேல் முதலியார். ஆங்கில மொழிபெயர்ப்பு. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம். ஆண்டு 1985.

(50) ''சிவஞானபோத மாபாடியப் பொருள் நிலை விளக்கம்''- சி.அருணை வடிவேல் முதலியார். தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம். 1991.

(51) ''சிவஞான மாபாடியம்'' - சி சு. மணி அவர்கள் உரை. திருநெல்வேலி அருள்நந்தி அருட்பணிமன்றம் வெளியீடு. ஆண்டு 1994.

(52) ''சிவஞானபோதம்'' - கு. வைத்தியநாதன் உரை. திருவாவடுதுறை ஆதீனம் -1994.

(53) ''சிவஞானபோதம் - வழித்துணை விளக்கஉரையுடன்'' - உரை - ஆ.ஆனந்தராசன் - வெளியீடு - அருள்நந்திசிவம் அருட்பணி மன்றம் - திருநெல்வேலி - ஆண்டு மே 1994.

(54) ''சிவஞானபோதம்'' - இரா. இராஜசேகரன்- பூம்புகார் 1997.

யாழ்ப்பாணம் - ஸ்ரீசுவாமிநாத பண்டிதரவர்கள் பதிப்பித்த வடமொழி சிவஞானபோத சிவாக்கிரமாபாஷ்யம் நூலின் முதற் பக்கம்.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவாக்கிரயோகிகள்

இயற்றியருளிய

வடமொழிச்

சிவஞானபோதத்து

முதற்சூத்திர வியாக்கியானம்

என்னும் சிவாக்கிரபாஷியமும்

தமிழ்மொழிபெயர்ப்பும்.

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து

மாதவச்சிவஞானயோகிகள்

இயற்றியருளிய

தென்மொழிச்சிவஞானபோதத்து

இரண்டாஞ்சூத்திரத்து முன்றுமதிகரணத்துத்

திராவிடமாபாடியமும்.

இவை

சுவாமிநாதபண்டிதரால்

1906-ஆம் ஆண்டு ஸ்ரீசுவாமிநாத பண்டிதர் பதிப்பத்த சிவஞானபோத மாபாடியம் முதற் பக்கம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய் நல்லூர்

மெய்கண்டதேவர்

அருளிச்செய்த

சிவஞானபோதமும்,

வார்த்திகமென்னும் பொழிப்புரையும்.

திருக்கைலாசபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்துச்

சிவஞானசுவாமிகளருளிச்செய்த

திராவிடமாபாடியம்

என்னும்

சிவஞானபோதமாபாடியமுஞ்

சிற்றுரையும்.

இவை

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்:

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பராபவ௵ ஆனி௴. (1906)

விலை ரூபா - ௨.

(Copyright Registered.)

1906-ஆம் ஆண்டு ஸ்ரீசுவாமிநாத பண்டிதர் பதிப்பித்த சிவஞானபோத மாபாடியத்திற்கு உதவியாகக் கிடைத்த நூல்கள் பட்டியல்

கிடைத்தபாடியப்பிரதிகள்.

மதுரை.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருமடத்துப் பிரதி. க

திருமயிலை.

மகாவித்துவான் ஸ்ரீமான் - தணிகாசலமுதலியாரவர்கள் பிரதி. க

யாழ்ப்பாணம்.

ஸ்ரீமத் - வைத்தியலிங்க உபாத்தியாயரவர்கள் பிரதி. க

ஸ்ரீமத் - பொன்னம்பலதேசிகரவர்கள் அச்சிட்ட பிரதி. க

இவை மங்கலவாழ்த்துமு..ல் முதற்சூத்திரத்து இரண்டாம் அதிகாணம் வரை உள்ள பாடியம் அடங்கப்பெற்றன. ஆறுஞ்சூத்திரத்துச் சிலபகுதிகளும் இன்னசூத்திரத்தைச்சார்ந்தனவென்றறியப்படாத சிலபகுதிகளும் கையெழுத்துப்பிரதிகளிலுள்ளன.

கும்பகோணம்.

வித்துவான் ஸ்ரீமத் - அருணாசலச்செட்டியாரவர்கள் பிரதி. க

வேதாரணியம்.

ஸ்ரீமத் - நாகநாதக்குருக்களவர்கள் பிரதி. க

இவை ஆறுஞ்சூத்திரத்திலுள்ள சிலபகுதிகள் அடங்கப்பெற்றன.

திருமாகறல்.

வித்துவான் ஸ்ரீமத் - கார்த்திகேயமுதலியாரவர்கள் பிரதி. க

இது பலபாடியக்குறிப்புக்கள் அடங்கப்பெற்றது.

சென்னை.

ஸ்ரீமத் - சித்தாந்தசரபமாகிய அட்டாவதானம் பூவை கலியாணசுந்தரமுதலியாரவர்கள் பிரதி. க

இது பஞ்சாக்கினிவித்தை முதலிய சிலகுறிப்புக்கள் அடங்கப்பெற்றது.

திருமயிலை.

வித்துவான் ஸ்ரீமத்- சண்முகப்பிள்ளை அவர்கள் அச்சிட்ட பிரதி. க

இது அத்துவிதப்பகுதியும் கருடபாவனைப்பகுதியும் அடங்கப்பெற்றது.

இப்பிரதிகளைத் தந்து உதவிய சிவஞானச்செல்வர்களாகிய இவர்களது பெருநன்றியை யான் எக்காலத்தும் மறவேன். இப்பாடியத்தாற் பயனடையும் ஏனையோரும் அதனை மறக்கற்பாலரல்லர். திருமடத்துப் பிரதியும் தணிகாசலமுதலியாரவர்கள்பிரதியும் பரிசோதனைக்கு இன்றியமையாதனவாய் இருந்தன.

மதுரை தமிழ்ச்சங்க வித்வான் காஞ்சி நாகலிங்க முதலியார் 1905-ஆம் ஆண்டில் வெளியிட்ட சிவஞானபோதம் முதல் பக்கம்

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டசாத்திரம்

மூலமுமுரையும்.

இவை

திருக்கைலாயபரம்பரைத்திருவாவடுதுறையாதீனத்து

மஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாணதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி,

அஷ்டாவதானம்

பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் மாணாக்கர்

வன்னக்களஞ்சியம்

காஞ்சி. நாகலிங்கமுதலியாரால்

பலபிரதிரூபங்கள்கொண்டு பரிசோதித்து,

மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் அக்கிராசனாதிபதியுமான

பாலவனத்தம் ஜமீந்தார்

ஸ்ரீமான்

பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள்

திரவியசகாயத்தினால்

சென்னை:

ஸ்ரீநிகேதனமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

கலியுகாதிஹு ௫௦௦௬க்கு மேல் செல்லும் குரோதிஹு ஆவணிமீ.

Registered Copy-right.

1905.

மெய்கண்ட சிவாசார்யார் துதிகள்

தொகுப்பு : ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்
திருச்சிராப்பள்ளி-620 008.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
    பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைகள் எல்லாங்
    கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
    மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தேவாழும்
    பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

- சிவஞானசித்தியார்-பரபக்கம்-திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
    மெய்கண்டார் இணைத்தாள் போற்றி. *- சந்தானாசாரியர் புராணம்*

அல்லாத பரசமய வலகைத்தேர் விண்ட
    கலவகல் புனற்பெண்ணை யயல் சூழ் வெண்ணைப்
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
    புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்றும் ஒன்றாய்
    நிற்குநிலை இதுவெனமெய்ந் நெறிதேர்ந் தியாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
    மெய்கண்டான் சரணமுடி மீது கொள்வாம். - சேதுபுராணம்

சிறிய ஆடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத் தவற்றின்
நெறியெ லாம்விளக் கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம். *- விநாயகபுராணம்*

புகழுமெய் கண்டார் ஞானப் புனிதபூங் கழல்கள் போற்றி.

-வாரியார் சுவாமியின் ஸ்ரீ அருணகிரிநாத புராணம்

போந்து புறத்துப் படரிருளைப் போக்குங் கதிரும் பன்னிரண்டே
பொங்கி அகத்துப் படரிருளைப் போக்குங் கதிரும் பன்னிரண்டே
ஏந்து புடவி யிடத்தெனப்பன் னிருசூத் திரஞ்செவ் வாய்மலர்ந்த
இணையில் வெண்ணெய் மெய்கண்டான் இணைத்தா
    மரைத்தாள் இறைஞ்சுவாம்.

- மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையின் அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்

அகத்திருளைப் போக்கலும்பன் னிருகதிரோன்
    எனத்தமிழி லழகு வாய்ப்ப
மகத்துவநூன் மொழிபெயர்த்தது உணர்ந்தியாமு
    மொழிபெயர்த்தல் வல்லேம் என்று
மிகத்தழைசத் தியஞான தரிசனிப்பேர்
    மொழிபெயர்த்து மெய்கண் டான் என்று
இகத்தியலப் பரஞ்சோதி யருளிய
    ஆசிரியனடி இறைஞ்சி வாழ்வாம்.

- மகாவித்வானின் சிவஞான யோகிகள் சரித்திரம்

சிந்திப்பாம் வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்திமகிழ் வாம்.

- மறைஞானசம்பந்தரின் - சைவ சமயநெறி

(இ-ள்):- திருவெண்ணெய் நல்லூரின் கண் எழுந்தருளி யிருந்த மெய்கண்டதேவருடைய திருவடிகளை மனசினாலே தியானிப்பாம். காயத்தினாலே வணங்குவாம், வாக்கினாலே துதித்து அதனால் களிப்பாம்.

நற்றமி ழாற்சிவ ஞான போதநூல்
சொற்றுயிர்க் கியல்பதாம் சுகோத யம்தரக்
கற்றவன் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
கொற்றமார் குரைகழல் குழைந்து போற்றுவாம்.

- சிவபுண்ணியத் தெளிவு

ஓங்குபுகழ்த் திருக்கடந்தை நகரில் வேளாண்
    உயர்குலஞ்செய் பெருந்தவமோர் உருவுற்றாங்கு
வாங்குதிரைக் கடலுலகில் வந்து தோன்றி
    மாதேவன் திருவடியை மறவா நெஞ்சில்
பாங்குறு நற்பரஞ்சோதி முனிவர் கூறும் பதிபசு
    பாசத்திறனிப் பாரோர் தேர்ந்து
தீங்ககலச் சிவஞான போதஞ்சாற்றும் செய்யமெய்க்
    கண்டார்தாள் சிரத்தில் வைப்பாம்.

- சிவஞானப்பிரான் பிள்ளையின் - திருக்கடந்தைப்புராணம்

பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ?

- தாயுமானவர் பாடல்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழஇயல்பாய்
நந்தி யுரைத்தருளு ஞானநூல் - சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

- சிவஞானபோதம்

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

- இருபா இருபது

பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந் தப்பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய் விண்ணப்பம் - பொய்காட்டா
மெய்யா திருவெண்ணெய் வித்தகா சுத்தவினா
ஐயாநீ தான்கேட் டருள்.

- உண்மைவிளக்கம்

வேதத்தின் அரும்பொருளை விமலனரு ணந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந்து அருந்தமிழால் எமக்குணர்த்தி எம்மூனஞ்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம். *- அருணகிரிப்புராணம்*

மைகண்ட மணிமிடற்றோன் விரித்த முன்னூன்
மரபுணர்ந்து வழிநூலா வகுத்தே யுண்மை
கைகண்ட சிவஞான போதந் தந்து
கலைமகளை வாழ்வித்துக் கடவுட் கொள்ளாப்
பொய்கண்ட சமயமுத லாய பொல்லாப்
புன்சமய நிலைகெடுத்த புரைதீர் வெண்ணெய்
மெய்கண்ட குரவர்முதற் குரவர் பொற்றாள்
விரைகமலப் போதுமுடி மீது கொள்வாம்.

- திருவாரூர்ப் புராணம்

பன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி யடிகளிந்தப் பாரின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதனப் பெருமா னிங்கே
வருகவென விளம்புதலு மவுன நீங்கித்
தன்னிகரி லவனதருள் பெற்றுச் சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவன்
அடியவருக்கு அடியவர்தாள் அகத்திற் சேர்ப்பாம்.

- திருவெண்காட்டுப் புராணம்

வாழ்த்து

''மழை வழங்குக மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருக,
தழைக ஐந்தெழுத்தோசை தரையெலாம்,
பழைய வைதிக சைவம் பரக்கவே''

கோயிற்புராணம் - ஸ்ரீமத் உமாபதிசிவம்

திருச்சிற்றம்பலம்.

சந்தானாசாரியர் திருநக்ஷத்திரம்

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஒதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

சிவஞான சுவாமிகள் திருநக்ஷத்திரம்

மண்ணும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி நாட்பகலோது ஆயிலியம் - பன்னும்
திருவாளன் எங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கும் தினம்.

''பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்துவித,
மெய்கண்டநாதன் அருள் மேவும்நாள் எந்நாளோ''.

- தாயுமானவர்.



திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்
திராவிட மாபாடிய கர்த்தர்

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்

சுபகிருது - ஐப்பசி - சுவாதி (26-10-2022) ஸ்ரீமெய்கண்டார் 800-ஆவது குருபூசையன்று
திருக்கயிலாய பரம்பரை - திருவாவடுதுறை ஆதீனம் 24-ஆவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்களின் திருக்கரங்களால் இந்நூல் வெளியிடப்பட்டது.